Registered as a NewsPaper பக்கங்கள் 08 விலை ரூபா: 6 00

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 16 (28-02-1992) வெள்ளிக்கிழமை ஓசை: 10

பயிலுனர் ஆசிரியர் தெரிவு

## போட்டிப் பரீட்சைகள் அடுத்தமாத இறுதியில்

கணித விஞ்ஞான பயிலுனர் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப்பரீட்சை அடுத்த மாதம் இறுதிப்பகுதியில் நடாத்தப்பட உள்ளது. கொழும்பு சென்று திரும்பிய யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார். இப்போட்டிப் பரீட்சையை நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் கொழும்பு பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. நாடு முழுவதும் நடாத்தப்படும் இப்போட்டிப் பரீட்சை மூலம் கணித விஞ்ஞான பயிலுனர் ஆசிரியர்கள் தேர்ந்தெ (8ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினையில் அரசு குழப்பம்

# ராணுவ அதிகாரிகள் அதிருப்தி

(கொழும்பு)

தமிழரின் தேசிய இனப் பிரச்சினையில் அரசாங்கம் குழம்பிய நிலையில் தெளிவற்ற கொள்கையை கடைப்பிடித்து வருவதால் இராணுவ தரப்பில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக நம்பகரமான அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

சமாதானப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென கூறிவரும் அரசாங்கம் அதேவேளை இராணுவ அணுகுமுறையையும் வலியுறுத்தி வருகிறது. இவ்விதம் அரசாங்கம் கடைப்பிடிக்கும் இரட்டைத் தன்மையான தெளிவற்ற அணுகுமுறை இராணுவ உயர் அதிகாரிகள் மத்தியில் குழப்பத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

புலிகளுக்கு எதிராக இராணுவத்தீர்வு என்றும் தமிழரின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்றும் பிரேமதாசா அரசு கூறிவருகின்றது. இது நடைமுறைக்கு சாத்தியமற்ற அணுகுமுறை என இராணுவ தரப்பில் கூறப்படுவதாகத் தெரிகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதாக இருந்தால் இறுதிக் கட்டத்தில் விடுதலைப் புலிகளுடனேயே பேசி ஆகவேண்டும் என்ற நிலையில், இன்றைய யுத்தத்திற்கு இராணுவத்தினர் பகடைக்காயாக பயன்படுத்தப்படுவதாக இராணுவ அதிகாரிகள் சிலர் கருதுவதாகத் தெரிகிறது. இதனால் அரசாங்கத்தின் கொள்கையில் தெளிவான ஒரு வரையறை இருக்கவேண்டுமென இந்த அதிகாரிகள் வற்புறுத்துவதாகத் தெரிகிறது.

## புலிகளுடன் பேச்சு நடத்த அரசு தயாராயுள்ளது

### - பிரட்மன் வீரக்கோன்

(லண்டன்)

இலங்கைத் தமிழர் நெருக்கடிகளுக்கு அரசியல் பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வு காண, அதாவது விடுதலைப் புலிகளை அழைத்துப் பேச தாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம் என்பதை ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் அண்மையில் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாக பி.பி.ஸி, தெரிவித்தது.

## புலிகளின் கப்பலில் இருந்த பொருள்கள் எங்கே?

### - கப்டன் நீதிமன்றத்தில் மனு

'ரொக்கோநாவா' கப்பலில் இருந்த பல இலட்சம் ரூபா மதிப்புள்ள பொருள்கள் என்னவானது என்று கேட்டுக் கப்பலின் கப்டன் சிறப்பு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கடத்தப்பட்டதாகக் கூறிக் (8 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில்ராணுவமுயற்சி புலிகளால் முறியடிப்பு

(வவுனியா)

வவுனியா - மன்னார் வீதிப் பகுதியிலும் பாவற்குளம் பெரியதம்பனைப் பகுதியிலும் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேற முயன்றனர்

முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது எல்லா முனைகளிலும் விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டனர் இத்தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத இராணுவம் பல முனைகளில் பின்வாங்கியுள்ளது பாவற்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பலத்த இழப்புக்களைச் சந்தித்துள்ளதாக தெரிய வருகின்றது.

6000 இற்கு மேற்பட்ட படையினர் இந்த இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

## யாழ்ப்பாணம் மீதான தாக்குதல்;

## தடுத்து நிறுத்துமாறு ஐ. நா. விடம் கோரிக்கை

(லண்டன்)

யாழ். மக்கள்மீது சிறிலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட இருக்கும் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துமாறு உலகின் பல பாகங்களிலும் இயங்கும் தமிழர் அமைப்புகள் ஐ.நா. மன்றத்தைக் கேட்டுக் கொண்டுள்ளன.

இங்கிலாந்து, ஐரோப்பா, அவுஸ்ரேலியா, வட அமெரிக்கா ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களும், தமிழர் அமைப்புகளும் இணைந்து 30,000 பேர் கையெழுத்திட்ட ஒரு மகஜரை ஐ. நா. மன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

## வன்னி மாவட்டங்களில் மீண்டும் ஊரடங்கு

(கொழும்பு)

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நேற்று நள்ளிரவு முதல் மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும். இந்த தகவலை கொழும்பில் ஒரு இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

அங்கு பெரிய அளவில் இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட இருப்பதாலேயே இந்த ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளை புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க கடந்த திங்கட்கிழமை முதல் சிறிலங்கா இராணுவம் பெரியதொரு நடவடிக்கையில் இறங்கியதாகவும் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு லெப். ராதா, வசந்தராஜ்

பாவற்குளம் பெரியதம்பனைப்பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத் (8 ஆம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (சா. த.) பரீட்சை

## செயல்முறைத் தேர்வுகள் அடுத்தமாத நடுப்பகுதியில்

கடந்த மூன்று ஆண்டுகளுக்கான க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைகளின் செயல்முறைத் தேர்வுகள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடாத்தப்படஉள்ளன.

யாழ்.மாவட்டத்தில் நீண்ட காலமாக நடாத்தப்படாமல் இருந்த இப்பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் அடுத்த மாத முதல் வாரத்தில் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட இருக்கிறது.

சங்கீதம், நடனம், மனையியல் ஆகிய பாடங்களுக்கான செயல்முறைத் தேர்வுகளே இதுவரை நடாத்தப்படாமல் இருந்தன. (க)

## புலிகளுடன் பேசுவது நட்புக்கு விரோதமானது

### 'இந்து' தெரிவிப்பு

விடுதலைப் புலிகளுடன் சிறிலங்கா அரசு பேச்சு நடத்துவது இந்திய நட்புறவுக்கு விரோதமானது என்று 'இந்து' பத்திரிகைஆசிரிய தலையங்கம் எழுதியுள்ளதென கொழும்புப் பததிரிகைகள்செய்திவெளியிட்டுள்ளன. இத்தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும் என்றும், ராஜீவ்காந்தி கொலைக்கும், புலிகளுக்கும் இடையிலானதொடர்பு சந்தர்ப்ப சாட்சியங்களின் அடிப்படையிலானது என்று இனி மேலும் கூறமுடியாதுஎன்றும், இச்சம்பவத்தையிட்டு இந்திய அரசு கடும்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப்படவேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

தலைவர்பிரபாகரனை நாடுகடத்த கோரவேண்டுமெனவும் (8 ஆம் பக்கம் பார்க்க)

## குச்சவெளி, மொரவேவவில் இரவு ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள குச்சவெளி, மொரவேவ ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இன்று மாலை 5 மணி தொடக்கம் காலை 8 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படும் என கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

மறு அறிவித்தல்வரை இந்த இரவு நேர ஊரடங்கு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## க. பொ. த. (உ. த.) பரீட்சை ஏப்ரல் முதல் வாரத்தில்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு நடைபெறாமல் தடைப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நடாத்தப்பட இருக்கிறது.

இப் பரீட்சைகளை நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். கல்வித்திணைக்களம் துரிதகதியில் மேற்கொண்டு வருகிறது.

கொழும்பு பரீட்சைத் திணைக்களமும் இதற்கான ஏற்பாடுகளை கவனித்து வருகின்றது. பரீட்சையை நடாத்துவதற்கு கூட்டுப்படைகளினது அங்கீகாரத்தையும் பரீட்சைத் திணைக்களம் கோரி (8 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய பிரிவுகள்

**தாவரவியல்**

**திரு. பொ. ஐங்கரநேசன்**

சனி/ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 01-03-1992

காலை 6.00 - 7.00 A/L 92 PAPER CLASS
பி.பகல் 3.30 - 4.30 A/L 93 தாவர உருவவியல்
பி.பகல் 4.30 - 5.30 A/L 93 தாழ்வகைத் தாவரங்கள்
பி-பகல் 5.30 - 6.30 A/L 93 உயிரியல் இரசாயனம்

**யூனிவேர்சல்**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

(சி/3974)



# அறிவித்தல்

எமது ஸ்தாபனம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதென்பதை வாடிக்கையாளர்களுக்கு மிக மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குணம் வீடியோ சென்ரர்**
**42, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-3971)


# 5-ம் ஆண்டுநினைவஞ்சலி



கட்டுவன் தாக்குதலில் வீரச்சாவடைந்த

**வீரவேங்கை நெல்சன்**

**(கணபதிப்பிள்ளை பாலகுமார்)**

வீரஜனனம் **22.12.1965**

வீரச்சாவு **28.02.1987**

தாய் மானம் காத்திட பாசத்தைத் துறந்தாய்
தாய் மண்ணை மீட்டிடவே புலிக்குட்டி ஆனாய்
தாய்மண்ணைநேசித்தாய்கட்டுவனில்மாவீரன்ஆனாய்
உன் வீரச்சாவே நின்புகழ் சொல்லுதடா!

''நகுலவாசா''
பாலகுமார் வீதி,
சிறுவிளான்,
இளவாலை.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
அண்ணன்மார், தங்கை,
உற்றார், உறவினர்
நண்பர்கள்.

(2236)

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

28.1.92 ஆம் திகதி அன்று பரந்தன் சந்திக்கும் ஊரியான் பாதைக்கும் இடையில் இணுவில் மேற்கைச் சேர்ந்த தர்மலிங்கம் - தெய்வேந்திரராசா என்பவரதுஅடையாள அட்டை (இல.570673084 V) சாரதி லைசென்ஸ்DL415515 பிரயாண பாஸ் ஆகியவை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.
(சி3972)

க.சிறிசோதிநாதனின் அடையாள அட்டை வவுனியா உட்செல்லும் பாஸ் வேலை அடையாள அட்டை என்பன சாவகச்சேரிக்கும் கொடிகாமத்திற்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள், கிறேசர்றோட், அளவெட்டி வடக்கு, அளவெட்டியில் ஒப்படைக்கவும். (2243)

## மீன் தூள் விற்பனை

கோழித் தீன் மற்றும் கால்நடை உணவுகளுக்கு சேர்க்கப்படும் புரதச்சத்து நிறைந்த மீன் தூள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள், உதயம் பல்பொருள் அங்காடி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(3962)

## விற்பனைக்கு

இந்தியன் தயாரிப்பான இரும்புப்பெட்டி (Iron Safe) உயரம்2,1/2, அகலம் 1'--10'' ஐந்து பூட்டுகளைக் கொண்டது. சீராக இயங்கக்கூடியது. வர்த்தக நிறுவனங்கள் வீட்டு உபயோகங்களுக்கு உகந்தது. விபரங்களுக்கு ஈழநாதம் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும் (2241)

## சோதிடம்

ஜாதகம் எழுத, எதிர்காலப்பலனறிய, விவாகப் பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்டஎண்களில் பெயரமைக்க: வேலணை சோதிடர், V A சிவராசா, 152B, அரசடி றோட், கந்தர்மடம். (2245)

## குழந்தைகள் வைத்தியம்

தீவக பாக்கியம் குழந்தைகள்-சிகிச்சை நிலையம்-K.K S வீதி மனோகராசந்திக்கு அருகாமையிலும் கல்வியங்காட்டிலிருந்து 1- மைல் தொலைவிலுள இருபாலை சந்தியிலும் இயங்குகின்றது. (2246)

## வைத்திய சேவை

தலைமயிர்வளர, முகப்பரு, வெண்குஷ்டம், வாதம், ஆஸ்த்மா மற்றும் சகல தோல் வியாதிகளுக்கும்மெய்ஞ்ஞான ஆலோசனைப்படி நுண்ணியியல் மருத்துவம் சந்திக்கும் நேரம் காலை9.00-12.00மணி வரைவேளாங்கண்ணிவைத்திய சாலை டாக்டர். எம்.கருணாகரன் 614, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.
(2240)


DHL உங்கள் கடிதங்களை
பாதுகாப்பாக உலகம் முழுவதும்
எடுத்துச் செல்கிறது

உங்களின் நண்பன்
DHL தபால் சேவை

**D. H. L. INTERNATIONAL**
*C/o Cosmos Marketing Services*
120, (200) K. K. S. Road,
Jaffna.

DHL WORLDWIDE EXPRESS

(சி/3970)


# 5ஆம் ஆண்டுநினைவஞ்சலி



உதயத்தில் **16. 11. 1960**

இதயத்தில் **28. 02. 1987**

**வீரவேங்கை சிவசிறி**

**(சௌந்திரபாண்டியன் ஹரிஹரமூர்த்தி)**

தாயகம் தனைக்காக்கப் புறப்பட்ட வேங்கை
தன்மானம் மிக்க மைந்தன் சிவசிறி
கட்டுவன்தனில் காடையர் சிரம் கொய்து
காட்டிய வீரம்தனை வானவரும் போற்றி நின்றார்.
உங்கள் நினைவுகள் என்றும் எம் இதயத்தில்.

வட்டாரம் 6,
புங்குடுதீவு.

தீவகமக்கள்

(2247)

# நினைவு கூருகின்றோம்

**1992-02-28**

1986ஆம் ஆண்டு இதே தினத்தில், மூதூர், கட்டைபறிச்சானில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 பொதுமக்கள், சித்தாண்டியில் சுட்டுக் கொல்லப்பட்ட பொது மகன்.

1987ஆம் ஆண்டு தேசவிரோதிகளுடனான மோதலின் போது வீரச்சாவெய்திய -

**லெப். கௌதமன்** [வேலாப்போடி திருச்செல்வம்-அம்பிலாந்துறை, மட்டக்களப்பு]

கட்டுவனில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய -

**மோகன்** [சுப்பையா பாலமோகன் - சந்திரபுரம், மட்டுவில் வடக்கு]

**நெல்சன்** [கணபதிப்பிள்ளை பாலகுமார் - நெல்சன் வீதி, சிறுவிளான், இளவாலை]

**கில்பேட்/கிட்லர்** [கந்தசாமி நடராஜா - காரைநகர்]

**தேவானந்** [வேலும்மயிலும் கேதீஸ்வரன் - மயிலிட்டி]

**சிவசிறி** [புங்குடுதீவு]

1991ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலின் போது காயமுற்று யாழ். மருத்துவமனையில் சிகிச்சை பெறும் போது வீரச்சாவெய்திய -

**லெப். கபில்/பாண்டி** [இராசரத்தினம், ராஜபாண்டியன் - 74/1, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு]

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/3969)

நல்லூர் கிளை நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்




மட்டக்களப்புப்பிராந்தியத்தில் தமிழ்தேசிய வாதத்தைக் கட்டி எழுப்புவதில் காசி அண்ணாவுக்கு எந்தளவுக்குப் பங்கிருந்ததோ அதேயளவு பங்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைக் கட்டி வளர்த்ததில் ஜெயம் (வள்ளுவன்) அண்ணருக்குண்டு.

காசி அண்ணாவின் தம்பியானஇவர்தான் அவரது 'அந்தரங்கக் காரியதரிசி' என்று சொல்லலாம். காசி அண்ணாவின் செய்திகளை அவரது நம்பிக்கைக் குரியவர்களிடம் சேர்ப்பது- காசி அண்ணா எங்கு செல்லவேண்டுமோ அங்கெல்லாம் அவரைக் கூட்டிக் கொண்டுசெல்வது... இன்னும் இன்னும் சுருங்கச் சொன்னால் அவரது நிழல்போல வாழ்ந்தவர். இதனால் இந்தப் பிராந்தியத்தில் விடுதலை உணர்வுள்ளவர்கள் யார் என்பதை அவர் இனங்கண்டிருந்தார். அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம். நம்பிக்கையான இலட்சியத்தில் உறுதியானவர்களை அடித்தளமாகக் கொண்ட இயக்கமாக எமது இயக்கத்தை உருவாக்கப்பாடுபட்டார்.

அத்துடன் முன்னர் இவர் மலேரியாத் தடுப்பு உத்தியோகத்தராகவும் இருந்தமையால் பொதுமக்களுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பமும் இவருக்கிருந்தது. இந்த அறிமுகங்களையெல்லாம் விடுதலைப் போராட்டத்தை வளர்ப்பதற்குப் பயன்படுத்தினார் அவர்.

ஆகவே, மட்டக்களப்புப் பிராந்தியப் போராளிகளுக்கு இவரது அருமை நன்றாகத் தெரியும். எந்த நெருக்கடியிலும், இவரைப் பாதுகாக்க வேண்டும் - இவரது பாதுகாப்பே இயக்கத்தினரைப் பாதுகாக்க உதவும் என்பது அவர்களது கருத்து.

இவரைப் பாதுகாப்பதற்கு தகுதியான ஆள் யார்?

இந்திய இராணுவம் புலிகளைத் தேடி மோப்பமிட்டுக் கொண்டிருந்த அந்த நெருக்கடியான காலகட்டத்தில் நீர்வழி, நிலவழி இரண்டிலும் திறமையாகச் செயற்படக் கூடியவர் யார்?

இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தனர். இப்பணியைச் செய்யக்கூடியவன் 'டைகர்தேவன்' தானென்று. ஏனெனில் லக்ஸ்மனை இவன் காப்பாற்றிய சம்பவம் - அது மயிர்க்கூச்செறிய வைக்கக்கூடியது.

★ ★ ★

பிரஜைகள் குழுவின் பெயரால் சிறிலங்கா காவல் துறையுடன் தொடர்பு கொண்டு பின்னர் நாளாவட்டத்தில் தமிழ்த் துரோகியாக மாறிவிட்ட சாம்-தம்பிமுத்து என்பவருக்கு மரணதண்டனையை நிறைவேற்றும்பொறுப்புலக்ஸ்மனிடம்ஒப்படைக்கப்பட்டது,

இவன்தான் இந்தியப் படையினரைக் கனவிலும் பயமுறுத்திக்கொண்டிருந்தவன். முகாமைவிட்டு வெளியே செல்லும் சமயங்களிலெல்லாம், அவர்கள் கடவுளைக் கும்பிட்டுவிட்டே செல்வார்கள். அங்கு கைதியாக இருந்தவர்கள் ஒரு நாள் இதற்கான காரணத்தை அவர்களிடம் வினாவினர். அதற்கு அவர்கள் அளித்த பதில் 'லக்ஸ்மன் பார்ட்டியை எதிரே சந்தித்துவிடக்கூடாது' என்றே தாம் கும்பிடுவதாகக் கூறினார்கள்.

இப்படியாக இந்தியப் படையையே கலக்கிக் கொண்டிருந்த 'லக்ஸ்மனின்' குழுவில் தான் இவனும் ஒருவனாக இருந்தான்.

நாற்புறமும் வாவியினால் சூழப்பட்ட புளியந்தீவு என அழைக்கப்படும் பகுதியே மட்டக்களப்பு நகரம். இதற்குள்தான் இருந்தது துரோகி சாம்-தம்பிமுத்துவின் இல்லம். தீவுக்கு வரும் இரு பாதையின் வழியிலும் படை முகாம்கள் இருப்பதால் 'புலிகள் தன்னை நெருங்க முடியாது' என அவர் கருதியிருந்தார். ஆனாலும், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்த சில தேசத் துரோகிகள் இவரது வீட்டைக் காவல் புரிந்து வந்தனர். எனினும், புகை போக முடியாத இடம் எல்லாம் புலி போகுமல்லவா? எப்படியோ லக்ஸ்மன் அந்த வீட்டினுள்ளே நுழைந்து விட்டான்.

சாம்-தம்பிமுத்துவின்எதிரே பிஸ்ரலுடன் லக்ஸ்மன்-ஆனாலும் பிஸ்ரல் காலை வாரிவிட்டது. ஒன்று இரண்டு.. மூன்று ஸ்ரக் ஆகிவிட்ட பிஸ்ரலிலிருந்து திரும்பத் திரும்ப ரவைகளை வெளியேற்றிவிட்டு சுட முயற்சித்தான் லக்ஸ்மன்... ஏமாற்றம்தான்.

இதே வேளை பின்பக்கத்தில் வந்த ஒரு தேசத் துரோகி லக்ஸ்மனைத் தாக்கினான். லக்ஸ்மனது கைமுறிந்து விட்டது. அவனும் கீழே விழுந்து



## லெப்டினன்ட் டைகர் தேவன்

விட்டான். அவனைக் கட்டி இந்தியப் படையிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தனர் அவர்கள். தகவல் அறிந்த இந்தியப்படையினரும் அப்பகுதியை முற்றுகையிட்டனர்.

இந்த நேரத்தில்தான் கையில் ஏ. கேயுடன் உள்ளே நுழைந்தான் டைகர் தேவன். அவனது ஏ கே. தேசத்துரோகிகளை எச்சரித்தது. அவ்வளவுதான் அனைவரும் உயிருக்கு அஞ்சி ஓடினர். இவன் லக்ஸ்மனைத் தோளில் போட்டுக் கொண்டு ஓடினான்.

நாற்புறமும் வாவியால் சூழப்பட்ட எமக்குப் பாதகமான இயற்கையமைப்பு-

இதற்குள் இவர்களுக்கென்றே போடப்பட்ட முற்றுகை-

ஆனாலும், எப்படியோ அவர்கள் கண்ணில் படாதவாறு லக்ஸ்மனைத் தூக்கிக் கொண்டு ஓடிவந்து ஒரு தோணியில் ஏற்றினான் டைகர் தேவன். நீரைக் கிழித்துக் கொண்டோடிய அந்தத் தோணி துடுப்பினாலும் புயல் வேகத்தை உருவாக்கக் கூடியவர்கள் புலிகள் என்பதை நிரூபித்தது.

கரைக்கு வந்த இந்தத் தோணியிலிருந்து லக்ஸ்மனை இறக்கும்போது, அவனுக்கு ஆறுதல் சொன்னான், "எப்பிடியும் இவனைப் போடலாம் மச்சான்... கொஞ்ச நாள் போக நீயே இவனைப் போடுவாய் பார்-"

காலம் இவனது கூற்றை நிரூபித்தது,

ஜெயம் அண்ணருக்குப் பாதுகாப்பாக இவன் இருந்த வேளையில்தான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது... தாழங்குடாவில். இவர்கள் தங்கி இருக்கும் இடத்தை யாரோ காட்டிக் கொடுத்து விட்டார்கள். கிட்ட நெருங்கியதும்தான் இந்தியப்படையைக் காண முடிந்தது இவனால். எஸ். எல். ஆர். களை இவனது ஏ. கே. கலவரப்படுத்தியது.

"நான் உயிரோடு இருக்கும் வரை ஜெயம் அண்ணரை நெருங்க விடமாட்டேன்" என்ற செய்தியைத் தனது ஏ. கே. மூலம் சொன்னான் இவன்.

சில வினாடிகளில் இவனது ஏ. கே. மௌனமாகியது- கூடவே இவனும்... அதன் பின்னர்தான் ஜெயம் அண்ணரின் வாய் சயனைட்டின் சுவையையறிந்தது.

★ ★ ★

மட்டக்களப்புப் படுவான் கரைப்பகுதி - இது. கூத்துக் கலைக்குப் பெயர் போனது கூத்தாடுபவர்களும், கூத்துப் பயிற்சி பெறுபவர்களும் மாலை வேளையில் உடுக்கடித்துப் பாடுவதைக் கேட்கலாம்.

இப்பகுதியில்தான், 1985-ம் ஆண்டளவில் இவன்-பிரசார வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். இந்தப் பகுதியிலுள்ள பண்டாரியாவெளி நாகதம்பிரான் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு ஆண்டு தோறும் நடைபெறும் பொங்கல் நாளில் தமது நேர்த்திக் கடன்களைச் செலுத்த ஏராளமான பக்தர்கள் கூடுவர். மட்டக்களப்பு நகரமே ஆற்றைக் கடந்து பண்டாரியா வெளிக்குவந்துவிடும். இரவைப் பகலாக்கும் வெளிச்சத்துடன் நடைபெறும் அந்தப் பொங்கல் விழாவில். ஆலய ஒலிபெருக்கியில் பொதுமக்கள் அறிவித்தல் செய்வதற்கு இரண்டு ரூபா கட்டணமாக அறவிடப்பட்டது. அவ்வாறு இரண்டு ரூபா பெற்றுக் கொண்டு ஒரு அறிவித்தலை ஒலிபரப்பினார்கள் - "மட்டுநகர்புதூரைச்சேர்ந்த தேவனை நீடூழிகாலம் வாழ்கவென பண்டாரியா வெளி நாகதம்பிரானை வேண்டி வாழ்த்துகின்றார்கள் அம்பிளாந்துறையைச் சேர்ந்த..."

இந்தக் காட்சிகள் இன்று நாம் இழந்து போனவைதான். இவைமட்டுமல்ல, கல்லடிப் பாலத்தில் நாம் கேட்கும் பாடும் மீன் இசை, படுவான் கரையின் கூத்திசை, அதிகாலையில் சித்தாண்டியில் கேட்கும் அவல் இடிக்கும் ஓசை; இவையெல்லாமே நாம் இழந்து போனவை.

இவற்றிற்குப்பதிலாக அவல ஓசைகளும், அந்த அவலங்களுக்குக் காரணமானவர்களின் முகாம்களுக்கு விஜயம் செய்யும் பிக்குமாரின் பிரித் ஓசைகளுமே ஓங்கி ஒலிக்கின்றன.

இந்நிலையை மாற்றும் இளைய தலைமுறைப் புலிகளின் துப்பாக்கி ஒலி பரவலாக அதிகரித்து வருகிறது. அன்று இவனுக்கு வாழ்த்துச் சொன்ன நாகதம்பிரான் கோயில் ஒலிபெருக்கி விரைவில் இவனுக்கு அஞ்சலி செய்யும். அந்த நாளில் இந்த மண்ணில் சுதந்திரம் நிலவும் என்பது திண்ணம்.

## தமிழகத்தில்

# மெக்கார்த்தியிசம்-- ஈழப்போர் இருட்டடிப்பு

ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினை பற்றியும் போராட்ட உணர்வு பற்றியும் இந்திய அரசும், அரசாங்கத்திடமிருந்து சில சலுகைகளைப் பெறத்துடிக்கும் பத்திரிகைகளும் தப்பான பிரசாரத்தை மேற்கொண்டுவருகின்றமை நாமெல்லாம் அறிந்த விடயம்,

தமிழீழ மக்களின் உணர்வுகளையும் சுதந்திர தாகத்தையும் அவமதிக்கும் இந்திய அரசுக்கு தமிழகத்தில் உள்ள சில அரசியல் கட்சிகள் துணை போவது வேதனைக்குரிய விஷயம்தான்.

எமது மக்களின் போராட்டத்தில் உள்ள நியாயத்தையும், தர்மத்தையும் சரிவரப் புரிந்து கொண்டுள்ள தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் சில தமது அரசியல் இலாபத்திற்காக எமதுபோராட்டத்தைக் கொலை செய்ய நினைக்கின்றன.

எமது புனிதமான போராட்டம், இந்தியாவின் அரசியல் ஆக்கப்பட்டு, அங்கே பதவி நாற்காலியில் அமர்வதற்கு இந்தியாவின் பல கட்சிகள் போட்டி போட்டுச் செயற்படுகின்றன,

ஈழத்தமிழர்களின் நியாயமான போராட்டத்தைப்பற்றி பல அறிஞர்களும் பத்திரிகையாளர்களும் சரிவரப் புரிந்து கொண்ட நிலையிலும் கூட இது சம்பந்தமாக பேசுவதற்கோ எழுதுவதற்கோ அஞ்சுகின்றனர். அந்தளவிற்கு இந்தியாவில் 'ஜனநாயகம்' வாழுகின்றது.

இந்த நிலையிலும் பல அறிஞர்கள், கட்டுரையாளர்கள் எமது போராட்டத்தின உண்மை நிலையை வெளிப்படுத்தி வருகின்றனர்.

'இலங்கைத் தமிழர்கள் வீடு-வாசல் இழந்து, உற்றார், உறவினர்களைப் பறிகொடுத்து இரத்தம் சிந்தி கைகாலிழந்து தங்களது ஜீவாதார உரிமைகளுக்காக ஒரு கொடுங்கோல் அரசாங்கத்துடன் போராடி வருகின்றனர் பல ஆண்டுகளாக. அவர்கள் உறுதிக்கும் வீரத்திற்கும் யாரும் தலை வணங்க வேண்டும்'' என்று தமிழ் நாட்டின் பிரபல உளவியல் கட்டுரையாளர் டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி கடந்த ஆண்டு ஆரம்பத்தில் 'ஜூனியர் விகடன்' இதழில் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

'தமிழ்நாட்டில் மெக்கார்த்தியிசம் என்ற மகுடத்தில் எழுதப்பட்ட அக்கட்டுரையில் அமெரிக்கநாட்டில் ஜோசப் மெக்கார்த்தி என்றொருசெனட்டர் (பாராளுமன்ற உறுப்பினர்) இருந்தார். அப்போது அமெரிக்காவில் 'கம்யூனிசம்' என்றோ 'அவன் ஒரு கம்யூனிஸ்ட்' என்றோ சொன்னால் போதும்... நாட்டைக் காட்டிக் கொடுப்பவன் என்ற இழிநிலைக்குத் தள்ளப்படுவான். ஏனெனில், கம்யூனிஸத்தைப் பற்றிய அத்தனை வெறுப்பு, அத்தனை கோபம், அத்தனை பயம் மக்களிடையே இருந்தது.

இதைப் பயன்படுத்தினார் மெக்கார்த்தி. யாரை எல்லாம் பிடிக்கவில்லையோ அவர்களையெல்லாம் 'கம்யூனிஸ்ட் தொடர்புள்ளவன்' என்று குற்றம் சாட்டினார். இதன் விளைவாக நியாயமாக நடந்து கொண்ட அரசாங்க அதிகாரிகள் பலர் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

இதனால் மெக்கார்த்தியைப் பற்றி எதிர்த்துவாயைத் திறக்கப் பயப்பட்டனர் மக்கள். 'இப்படிக் குற்றம் சாட்டுவது முறையல்ல' என்று மெக்கார்த்திக்கு எதிராக யாராவது கூறினால் கூட உடனே 'அவன் கம்யூனிஸ்ட் அதனால்தான் தன்னைக் காத்துக் கொள்ள இப்படிப் பேசுகிறான்' என்று கடுமையாகக் குற்றம் சாட்டி அவர்களை விமர்சித்தார். அவர்களது வாழ்வை சின்னாபின்னப்படுத்தினார்.

இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து இதற்கு மெக்கார்த்தியிசம்' என்று பெயரிட்டு 'அவர் செய்தவை நியாயமற்றவை அநியாயமான மிரட்டல்கள். பொய்யான குற்றச் சாட்டுகள்; என்று விரிவாக எழுதப்பட்டது; பேசப்பட்டது. நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ராபட் ஒப்பன்ஹிமர் கூட இப்படி மெக்கார்த்தியினால் பதவி இழந்து அரசாங்க கண்காணிப்பிற்கு ஆளானார் என்றல் மெக்கார்த்தியிசத்தின் சக்தியைப் பற்றிப் புரிந்து கொள்ளலாம் என்று குறிப்பிடும் கட்டுரையாளர், மேலும் கூறுகிறார்.

மெக்கார்த்தியிசம் தமிழ் நாட்டில் நடக்கவிடக் கூடாது. புத்திசாலிகளான தமிழ் மக்கள் இலங்கைப் பிரச்சினையின் உண்மை நிலை என்ன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இப்படிப் பட்ட மெக்கார்த்தியிசத்தினால்சில உண்மைகள் இலங்கைத்தமிழர்களின் உண்மையானபிரச்சினைகள்-அவர்கள் அங்கே படும் அவதிகள்- அநியாயங்கள் கூட அலட்சியப் படுத்தப்படுகின்றன. நியாயங்கள் இருட்டடிப்புச் செய்யப் படுகின்றன.

'என்னுடைய வருத்தம் தி. மு. க. வை நீக்க இலங்கைத் தமிழர் பிரச்சினை பலியாயிற்றே என்பதுதான்' என்று குறிப்பிடும் கட்டுரையாளர், இன்று இலங்கைத் தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் பெற்றுத் தரவேண்டும். அதுகொடுக்கப்படாவிடில் தனி ஈழம்அமைக்கஉதவ வேண்டும். 'தனி ஈழம் அமைத்தால் தமிழ்நாடு தனியே போகும். இந்தியாவிற்கு ஆபத்து' என்பதெல்லாம் உண்மைகளை மூடிமறைக்கும் வஞ்சகத்தின் குரல் என்று அக்கட்டுரையை அவர் முடித்துள்ளார்.

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி தமிழ்நாட்டை மட்டுந்தான் இங்கே குறிப்பிட்டுள்ளார். ஆனால் - இந்த மெக்கார்த்தியிசம் முழு இந்தியாவிலும், சிறிலங்காவிலும் கூட பரவியுள்ளது என்று சொன்னால் மிகையாகாது.

ஈழத்தமிழ்மக்களின்போராட்டமும் வீரமும், தியாகமும் இந்த மெக்கார்த்தியிசவாதிகளினால் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன. ஆயினும் உலக மக்கள் எமது போராட்டத்தின் உண்மை நிலையை உணர்ந்த நிலையிலேயே உள்ளனர். அல்லது உணர்ந்து கொண்டிருக்கின்றனர்.

25 ஆண்டுகளின் பின்னரே மெக்கார்த்தியைப் பற்றி எதிர்த்து (வெளிப்படையாக) குரல் எழுப்பினார்கள் அமெரிக்கர். இதைவிட குறுகிய காலத்திலேயே தமிழ்நாட்டின் மெக்கார்த்திகளை தமிழக மக்கள் எதிர்த்துக் குரல் எழுப்புவார்கள் என நம்பலாம்.

திலீபன்

## சிறுகதை

# தாய்

ஈழநாதம் இரண்டாவது ஆண்டு நினைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றது.

மாவீரன் நெப்போலியனுடைய வீரம், திறமை அயராத உழைப்பு இவை யாவும் இன்று உலகம்முழுவதுமே போற்றப்படுகின்ற, பேசப்படுகின்ற விஷயங்கள் சாம்ராஜ்யத்தை ஆளுகின்ற சக்கரவர்த்தியாகியபோது பெற்ற தாயின் பாசத்தை இழக்கின்ற சோகம் நெப்போலியனுக்கு ஏற்பட்டது. அது ஏன் என்பதைத் தெரிந்து கொள்ளுகின்ற போது நெப்போலியனை விட, உண்மையான போற்றுதலுக்குரியவள் - அவளைப் பெற்றெடுத்த தாய் தான் என்பது உணரப்படுகின்றது.

அந்த உணர்வில் பிறந்ததே இச் சிறுகதை.

திருமதி சாவித்திரி அத்துவிதானந்தன்

''ஓ... கோசிக்காவின் மலை மேடுகளே...
ஏன் உறைந்து போய் நிற்கிறீர்கள்?
சல சலக்கின்ற நீரோடைகளே....
ஏன் நீங்கள் துள்ளிப்பாயவில்லை?
பறந்து திரிகின்ற பட்சி ஜாலங்களே.
ஏன் மிரட்சியோடு சிறகடிக்கிறீர்கள்?
வேண்டாம். வேண்டவே வேண்டாம்.
நீங்கள் நீங்களாகவே இருங்கள்.
இது எங்களுடைய மண்ணே தான்.
கோசிக்கா- என்றும் எங்கள் தீவு தான்.
இதோ- என் பின்னால் வருகிறானே
அவன் எங்கள் தீவை விடுவிப்பான்!''

இனிமையான தனது குரலில் இந்தப் பாடலைப் பாடியபடியே மலைமேட்டில் வளைந்து சென்ற பாதையில் இலத்தீசியா நடக்கிறாள்- குளிருக்குஇதமான தடித்த சட்டை போட்டு, தலை முழுவதும் தொப்பியினுள் மறைந்து போய்விட, முகம் மட்டும் வெளியே தெரிய ஆறு வயதுச் சிறுவன் ஒருவன் ஒடியும் நடந்தும் அவளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறான். சிறுவனுடைய கவனம்முழுவதும்அவள் -அவனுடைய தாய்- பாடிய பாடலிலேயே ஒருமித்துக் கிடந்தது.

பனி இன்னமும் நன்றாக விலகவில்லை.

மலைமுகடுகளிலிருந்துபனிப் புகார்மேலே கிளம்பிப் பஞ்சுப் பொதிகளெனக் காற்றோடு பயணம் செய்து கொண்டிருந்தது.

சிறுவனுடைய காலடியோசை அருகில் கேட்காது போகவே தாய் திரும்பிப் பார்க்கிறாள்-

''நெப்போலியன். விழுந்தாயா என்ன?''

''இல்லை அம்மா. எழுந்து விட்டேனே. இதோ வருகிறேன்.'' பையன் விரைவாக ஓடி வந்து தாயுடன் சேர்ந்து கொள்கிறான்.

''அதுதானே பார்த்தேன். விழுந்தாலும் நீ எழுந்து விடுவாய் என்பது எனக்குத் தெரியும். கெட்டிக்காரன். எங்கள் தீவை விடுவிக்க இருப்பவன் அல்லவா நீ?சரி சரி விரைவாக என்னோடு வா.''

தாய் நடக்கிறாள்.

அவள்கைகளில்விறகுக்கட்டு அன்றைய சமையலுக்கு அந்த விறகுகளே பயன்படப் போகின்றன.

சிறிது தூரம் தாண்டியபிறகு திடீரெனத் தாயின் நடை தடைப்படுகிறது.

நின்று, திரும்பி மகனைப் பார்க்கிறாள்.

''ஏனம்மா நின்றுவிட்டாய்? விறகுபாரமாய்இருக்கிறதா?''

''இல்லை மகனே.என் இதயம் தான் பாரமாய்க் கிடக்கிறது''

தாய் என்ன சொல்கிறாள்?

சிறுவனுக்குப் புரியவில்லை.

அண்ணாந்து அவளைப் பார்க்கிறான்.பள பளக்கும் அந்தச் சிறிய கருவண்டுக் கண்களில் கேள்விக்குறி.

குனிந்து விறகுக் கட்டைக் கீழே வைத்து விட்டு இலத்தீசியா மண்டியிட்டு அவன் முன் அமர்கிறாள்-அந்தப்பிஞ்சு முகத்தைத் தனதுகைகளில்ஏந்தியபடி,

''நெப்போலியன். உனது தாய்மண்ணை-இந்தக் கோசிக்காத்தீவை - நிச்சயம் நீ மீட்டெடுப்பாயல்லவா?ஆம்என்று சொல் மகனே.''

தாய் கெஞ்சுகிறாள்.

சிறுவனுடைய இதயத்தில் புத்தம்புதிய ஊற்று ஒன்று சுரக்கிறது. மெல்ல மெல்ல உடலெங்கும் வருடிப் பிரவாகம் எடுக்கிறது. அதன் தொடுகையில் அவன் சிலிர்த்துப்போகிறான்.

ஒவ்வொரு நாளின் காலைப் பொழுதிலும் தாயுடன் சேர்ந்து நடக்கின்ற போது, அவளுடைய இனிமையான குரலில் வெளிப்பட்ட பாடல்களின் அர்த்தம் இப்போது புரிவது போலிருக்கிறது அவனுக்கு. தாய் அவனுக்குச் சொன்ன கவிதைகளின் உள்ளேபுதைந்து கிடந்த ஆவலும் ஆதங்கமும் கோசிக்காவின் மீட்புக்கானவையே என்பதை அந்தச் சின்னஞ்சிறிய இதயம் அர்த்தம் செய்து கொண்டது.

தாயின் கைகளைத் தனது கைகளால் இறுகப் பற்றியபடியே தலையசைப்பில் சம்மதம் தெரிவிக்கிறான்.

சிறுவனுடைய கண்களில் தெரிந்த புதிய ஒளி, 'நிச்சயம் செய்வேன்' என்று தாயிடம் சத்தியம் செய்தது.

தாயின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர்.

மகனைக் கட்டியணைத்து ஆசையோடு முத்தமிட்டவள், எழுந்து நின்று தனது கையை உயர்த்தி ஆவேசத்துடன் உரக்கச் சொல்கிறாள்.

''கோசிக்கா மீட்கப்படும்.''

மலை முகடுகளும் அவள் குரலை எதிரொலி செய்கின்றன.

''கோசிக்கா மீட்கப்படும்!''

★ ★ ★

சிறுவனுக்கு ஒன்பது வயதாகி விட்டது.

அவன் வயதையொத்த சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடுவதெல்லாம் மிகவும்குறைவு.

ஏதோஒருசிந்தனையில்எந்த நேரமும் அமிழ்ந்து போய்க் காணப்படுவான். பள்ளிக்குப் போய்வருவான்.இடையில்சில தினங்கள் போகாமலும் விட்டு விடுவான்.

ஒரு மாலைப் பொழுது.

இவனுடைய பள்ளித்தோழர்கள் சிலர் மலையடிவாரத்தில்நின்றுவிளையாடிக்கொண்டிருந்தார்கள். இவன் மட்டும் ஒரு மலையின் இடுக்கில் அமர்ந்தபடி எதையோ தீவிரமாக யோசித்தபடி இருக்கிறான்.

ஒரு சிறுவன் அவ்விடத்திற்கு ஓடி வருகிறான்.

''நெப்போலியன்ஏன்இங்கே தனியாகஉட்கார்ந்து கொண்டு ஏதோ எண்ணமிட்டுக் கொண்டிருக்கிறாய்? அப்படி என்ன தான் சிந்தனை உனக்கு?''

''கோசிக்காவைஎப்படி மீட்டெடுப்பது என்பதைப் பற்றித் தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.''

★ ★ ★

கோசிக்காத்தீவு பிரான்ஸ் நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த காலம் அது.

அடிமைத்தனத்துக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் ஆளாகும் போது தான் உண்மையான சுதந்திரத்தின் பெறுமதி மக்களால் உணரப்படுகிறது. சுதந்திரம் ஒன்றே மற்றெதையும் விட-ஆம் உயிரையும்விட-உன்னதமானது என்பது தெளிவாகிறது. போராட்ட உணர்வு கருக்கொள்கிறது. புரட்சியாய்ப் பிறக்கிறது.

கோசிக்காவின் மக்கள் மனங்களிலும் விடுதலை உணர்வு தீவிரமாய் வளர்ந்தது.

இலத்தீசியா கோசிக்காவின் பிரஜை.

சாதாரண குடும்பம் அவளுடையது.அவளுடைய உணர்வுகள் உன்னதமானவையாய் இருந்தன. அடிமைத் தளையிலிருந்து தனது தாய்நிலம் விடுபடவேண்டும்என்ற எண்ணமே சதா சர்வகாலமும் அவளுடைய சிந்தனை, செயல் யாவற்றிலும் நீக்கமற நிறைந்திருந்தது.

தனது மகன் நெப்போலியன் தங்கள் தீவின் விடுதலையை வென்றெடுப்பான் என அவள் கனவு கண்டாள்.கனவு நனவாகும் எனத் திடமாய் நம்பினாள்-தன்னை அப்படி நம்ப வைத்தது எது என்பது அவளுக்கே தெரியாத ஒன்று.

சிறுவயதிலிருந்தே நெப்போலியனுடைய மனதில் வீரஉணர்வுகளை ஊட்டினாள். மகனுக்காக அவள் பாடிய பாடல்கள், கூறிய கவிதைகள், விபரித்த கதைகள், இன்னும் இன்னும் எல்லாமே அந்தச் சிறுவனிடம்வீரத்தையும்,வேகத்தையும் வளர்ப்பவையாக இருந்தன. அவன் சிறந்ததொரு போர்வீரனாகவேண்டும்என்ற தீவிரமான ஆவலில் பாரிஸ்நகரில் இராணுவக்கல்லூரி ஒன்றில் நெப்போலியனைக் கல்வி கற்பதற்காகச் சேர்த்தாள்.

தாயினிடத்தில் அளவற்ற பாசம் கொண்டிருந்த நெப்போலியன் அந்த அன்புத் தாயின் வழிகாட்டலில், மனதில் வீர உணர்வுகளுடன், நேர்மை, இரக்கம், தன்னம்பிக்கை, அயராது உழைக்கும் தன்மை- இவற்றையெல்லாம் தனது பண்புகளாக வளர்த்துக் கொண்டான்.

அவனது ஆர்வமும்,திறமையும் கல்லூரியிலேயே அவனை முதல் மாணவனாக்கின. மிகவும் திறமை வாய்ந்த, தேர்ச்சி பெற்ற இராணுவ வீரனாக நெப்போலியன் உருவாகினான்.

★ ★ ★

பிரெஞ்சு மன்னனுடைய ஆட்சியை அவனுடைய நாட்டின் மக்களே வெறுத்தார்கள். மன்னனுக்கெதிரான கலகங்கள்மக்களிடையேதோன்றின.

பாரிஸ் யுத்தகளமாயிற்று-

பிரெஞ்சுப் படையோ சிதறிக் கிடந்தது.

கலகத்தை அடக்கும் வல்லமை நெப்போலியனிடமே உண்டு என்பதைப் புரிந்து கொண்ட நிர்வாகத்தினர் அவனை நாடினார்கள். நெப்போலியன் சேனைத் தலைவன் ஆனான் .....

வெற்றிகள் தொடர்ந்தன. நெப்போலியன் என்ற இருபத்தைந்து வயது இளைஞனின் படை நடத்தலில் பல நாடுகள் பிரான்ஸ் இடம் அடிபணிந்தன.

பாராட்டுதல்களும் பரிசுகளும் பிரிக்க முடியாதவையாய் அவனோடு இணைந்தன.

வீரம் வெற்றிகளைத் தேடிக் கொடுத்தது......

வெற்றிகள் பதவிக்கு வழி வகுத்தன......

'பதவி'யில் - 'சுதந்திரம்' மறந்து போயிற்று.

★ ★ ★

மாபெரும் பிரெஞ்சுப் புரட்சி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஏழு தீவுகள் ஒரு நகரமாகியது

பம்பாய் நகரம் உலகத்தின் ஐந்தாவது பெரிய நகரமாகவும் இந்தியாவின் முதலாவது நகரமாகவும் விளங்குகிறது.

இன்றைய பம்பாய் நகரம் கி. மு. 1000 ஆண்டுகளுக்கு முன்னர் ஹெப்டனேசியா என்ற பெயரில் ஏழு சிறுதீவுகளாக இருந்தது.

16 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் குஜராத் சுல்தான் இத் தீவுகளை போர்த்துக்கீசருக்கு கையளித்தார். 1661 இல், இங்கிலாந்து மன்னரான இரண்டாவது சார்ல்ஸ் போர்த்துக்கீச மன்னரின் தங்கையான கதரீன் என்பவரைத் திருமணம் செய்தவேளை கதரீனுக்கு சீதனமாக இத் தீவுகள் வழங்கப்பட்டன.

ஆனால் இத் தீவுகள் சதுப்பு நிலமாக இருந்தமையால் சார்ல்ஸ் மன்னர் இவற்றை கிழக்கிந்திய தீவுக் கம்பனியொன்றுக்கு குத்தகைக்குக் கொடுத்தார். இந்தக் கம்பனியே இத் தீவுகளையெல்லாம் ஒன்றிணைத்து பம்பாய் நகரமாக்கியது.

# துடிக்கின்ற புழு

அடிக்கின்ற வெயிலதனில் அவதியதை மிகவுற்றுத்
துடிக்கின்ற புழுப்போலத் துயரதிலே துள்ளியுடன்
வெடிக்கின்ற இதயத்தால் வேதனையை வெளிக்காட்டி
முடிக்கின்ற கதியற்று முனங்குகிறார் எம் மக்கள்.

மருந்து விலைகேட்டால் மரணந்தான் வந்துவிடும்
அருந்த உணவில்லை அழுதாலும் கதியில்லை
பொருந்த இருப்போர்கள் பொல்லாங்கு செய்கின்றார்
வருந்த இவர்சிறிதும் வாட்டமது கொள்ளார்கள்.

வெள்ளம் அதுவாக விடமாக விலையேறி
உள்ளம் அழவே உயர்ந்து விடும்போது
தள்ள முடியாத தமக்கான பொருளின்றி
மெள்ள இறப்பை மேலென்று கொள்ளுவரோ?

மெத்த உடல்தன்னை மிகக்கழுவும் சவர்க்காரம்
ஒத்த விலையின்றி ஒருநூறாய் உயர்ந்துவிட
நித்த மதனாலே நிறைவான பணம் பெறுவோர்
சித்த மழுக்காகச் சிறப்பதனை எய்துவரோ?

பாலுக் கழுது பாலகரும் பரிதவிக்க
மேலுக்கு மேலும் மிகையாக விலைகூட்ட
தோலுக் கெலும்பாகத் துன்பமுறும் சிறார்தம்மைக்
காலுக் குரிய காலணியாய்க் கருதுவரோ?

- மு. பாலசுப்பிரமணியம்

'ஈழநாதம்' இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற கவிதை.

யாழ்ப்பாணம்

## பூம்புகாரில் கிராம பொருளாதார வளர்ச்சித் திட்டம்

# கோழி வளர்ப்பு முதல்

யாழ்ப்பாணத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து சுமார் மூன்று கட்டை தூரத்தில் வலப்பக்கமாகக் கரடுமுரடான பாதையில் திரும்பினால் அது பூம்புகாருக்குச் செல்லும் வழி, வீதியின் ஓரத்தில் வயல்களில் எப்போதோ அறுவடை நடந்து முடிந்திருந்தது. வழியில் நடமாட்டம் குறைவு சூரியன் தன் ஒளியைப் பரப்பியிருந்தது. வெயில் அச்சமூட்டுவதாயிருந்தது. மதியவேளையாதலால் வயலில் வேலை செய்யும் தொழிலாளர்கள் கையில் சாப்பாட்டுப் பொட்டலங்களுடன் இலைகளற்ற மரத்தின் கீழ் ஒதுங்கி வயலை வெறுத்துப் பார்த்தபடி இருந்தனர்.

பூம்புகாரை நெருங்கும் வீதியில் இரு பக்கமும் முட்புதர்கள் வீதியின் ஓரத்தில் இருமருங்கும் இப்போதுதான் நிழல் மரங்கள் நடப்பட்டிருந்தன, ஒரு வெட்டையில் வலப்பக்கமாகத் திரும்பினால் கண்ணுக்கெட்டிய தூரத்தில் பூம்புகார் குடிமனைகள் நிறமிழந்து சோகை பிடித்தது போல் தோன்றிய தென்னை மரங்கள் காற்றில் அசைந்தாடின. நகர் மயப் போக்கின் அம்சங்கள் பூம்புகாரை செழுமைப்படுத்தவில்லை.

இப்போது நாம் காண்பதெல்லாம் வெள்ளை வெளேரென்ற பரந்த மணற்பரப்பில் கஞ்சிக்குப் பயறு போட்டது போல் சிறிய கல்வீடுகள். பெரும்பாலும் மண் குடிசைகளே கண்களை உறுத்தின.

''ஓ! நாம் கூட முன்பு இந்த பூம்புகாருக்கு வந்திருக்கிறோம்.'' என்று கூட துணையாக வந்த கிருபாவுடன் அசைபோட்டுக் கொண்டேன். பூம்புகாரைப் பற்றிய எண்ணங்கள் என்மனதில் மாறிமாறி வந்து கொண்டிருந்தன. மணல்பரந்திருந்த வீதியைக் காண வில்லை சுமாரான மாற்றங்கள்

### நித்திலா கல்விக்கூடம்

திடீரெனபவானி (நித்திலா) கல்விக் கூடம் என்ற பெயர்ப் பலகை கண்ணில் பட்டது. தயங்கி, திரும்பிசைக்கிள்களை விட்டு இறங்கிப் பள்ளிக் கூடத்தின் நுழைவாயிலில் காலடி எடுத்து வைத்தோம். பள்ளிக்கூட வளாகத்தில் சந்தடியில்லாத ஒதுக்குப்புறமான நிழலில் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது.

கதவு வழியாக நோக்கியபடி நின்ற எங்களை ஒரு ஆசிரியை வந்து இன் முகத்தோடு வரவேற்றார். சாரளம் வழியாக வகுப்பறைகளை நோக்சியவாறு மாணவர்கள் இல்லாத காற்று வாங்கிய ஒரு வகுப்பறைக்குள் சென்றோம். வகுப்புகள் மாமூல் படி நடந்து கொண்டிருந்தன. பக்கத்து வகுப்பறையில் நான்காம் ஆண்டாக இருக்கலாம், ஆங்கிலப் பாடம் நடந்து கொண்டிந்தது.

அமைதியான அந்தப் பள்ளிக்கூடத்தைச் சுற்றிலும் அமைந்துள்ள அழகான சுற்றுச் சூழல் எம்மைக் கவர்ந்தது. எறிக்கும் வெயிலிலும் பக்கத்துக் கடலில் இருந்து மிதந்து

எப்போது ஆரம்பித்தார்கள்?''

''6-1-1992 இல் நித்திலா கல்விக் கூடம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப் பட்டது.''

—இந்த உரையாடல் எனக்கும் ஒரு பயிற்றப் பட்ட ஆசிரியைக்கும் இடையில் நடந்தது. அதே நேரத்தில் பக்கத்தில் இரண்டு ஆசிரியர்கள் நின்று கொண்டிருந்தார்கள். கிருபா என் பக்கத்திலேயே மௌனமாய் உட்காந்திருந்தார்.

என்னைக் கல்வி அதிகாரி என்றோ என்னவோ நினைத்து என்று எண்ணிய எனக்கு கிருபா கிராம பொருளாதார வளர்ச்சித் திட்டப் பொறுப்பாளர் மிதுளாவைச்சந்திக்கும் படி கூறினார். அவர் தூண்டுதலின் விளைவாக மிதுளாவை அவர் அலுவலகத்தில் சந்தித்தேன்.

ஓலையால் வேய்ந்த அலுவலகம். நிலத்துக்கு மண்பரப்பப் பட்டிருந்தது. புன்முறுவலித்த முகத்தோடு எம்மை வரவேற்றார். கதிரையில் அமர்ந்திருந்த அவரின் கதை முதலில் பெண்கள் பக்கம் திரும்பியது.

''பெண்கள் கடினமான வேலை செய்யமுடியாது என்ற கருத்து சமூகத்தில் நிலவுகிறது. வீதியமைத்தல், பள்ளிக்கூடம்

# குழந்தைப் பராமரிப்பு வரை

வந்த காற்று இதமாகவிருந்தது. நகரப் பள்ளிக்கூட வகுப்பறைகளில் காற்று என்பது மற்றவர்கள் விடும் மூச்சாகத்தான் இருக்கும் நித்திலா கல்விக் கூடத்தை வாயுதேவன் ஒரு வரம்புக்குள்ளேயே சுற்றிச் சுற்றிப் பேசினார்கள். நான் செய்தியாளர் என்று சொன்னதும் தம்மைச் சுதாகரித்துக் கொண்டார்கள்.

அதிபர் கடமை காரணமாக கட்டுதல், கலவை போடுதல், மண்தட்டில்பரப்புதல்போன்ற வேலைகளில் பெண்களும்தமது பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். ஆண்களுக்குச் சமமான வேலைகளைச் செய்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. முழுச் சமூகமுமே ஒத்தாசையாக இயங்குகிறது. வயல் வேலைசெய்யும் பெண்களுக்கு 75 ரூபா கூலி வழங்கப்படுகிறது ஆண்களுக்கு நாளொன்றுக்கு 100 ரூபா கொடுக்கப்படுகிறது இப்பொழுது பெண்கள் சமசம்பளத்தை வற்புறுத்துகிறார்கள்.

1987 ஆம் ஆண்டு செப்டம்பரில் திலீபன்உண்ணாநோன்பு தொடர்பாக நித்திலா பாதயாத்திரைவந்தபோது. இந்தப் பகுதி மக்கள் படும் கஷ்டங்களைக் கண்டு அவர்களுக்கு உதவும் வகையில் பயன்பொருத்தமான காரியம்எதையும் செய்ய வேண்டும் என்ற எண்ணம் நித்திலா மனதில் கருக்கட்டியது.

> உண்மையான முயற்சி இருப்பின் வாழ்வில் நிறைவைப் பெற்றுவிடலாம் என்பதற்கு ஓர் உதாரணம் நித்திலா கல்விக் கூடம்.

எப்போதும் எட்டிப் பார்த்துக் கொண்டுதான் இநக்கிறான்

''இந்தப் பள்ளிக்கூடத்தை கல்வித் திணைக்களத்துக்குச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள். பள்ளிக் கூடத்தில் மொத்தம் 150 பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஐந்து வரை வகுப்புகள் உள்ளன. சிறிய வகுப்புகளை நேரத்துடன் வழமை போல் வீட்டுக்கு அனுப்பியிருந்தார்கள்.

பார்வையை ஓடவிட்டோம். வகுப்பொன்றில் எல்லா பெஞ்சுகளிலும் மாணவ-மாணவிகள் குனிந்த தலைகளை அவ்வப்போது கரும்பலகையைப் பார்க்க மட்டும் திருப்பி. அப்பியாசக் கொப்பிகளில் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார்கள் ஆனால் கடைசி வாங்கில் இருந்தவர்கள் மட்டும் குனிந்தபடி என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

அதிபர் உட்பட ஐந்து ஆசிரியர்கள். அதிபரும், ஒரு ஆசிரியையும் பயிற்றப்பட்டவர்கள். தலையில் நரையும், நெற்றியில் அனுபவத்தின் சுருக்கங்களும் படிந்த ஆசிரியைகள் அல்வர் இவர்கள். பயிற்றப்பட்ட ஆசிரியை, இப்போதுதான் பலாலி ஆசிரியர் கல்லூரியில் பயிற்சியை முடித்து வெளியேறியவர். ஒருவர் டயிலுனர் ஆசிரியர். மற்ற இருவரும் ஏ. எல். வரை படித்தவர்கள்

'' மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் எப்படி?'' என்றேன். ' சங்கீதம், நடனம், விளையாட்டு ஆகியவற்றிலும் கூட ஆர்வம் காட்டுகிறார்கள் என்றார்கள். நாடகம் நடத்தலாம், நாட்டியக் கச்சேரி வைக்கலாம், விளையாட்டு மூலம் கல்வியைக் கற்பிக்கலாம் (Playway Method)'' என்று பலதரப்பட்ட யோசனைகள் சொல்லப்பட்டன.

இந்தச் செவ்வியை நான் எழுதுவதற்கு முன்னர் கனகரெட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற தமிழ் தினப் போட்டியில் இரண்டு இடங்களை நித்திலா கல்விக் கூடம் தட்டிக் கொண்டது மறக்க முடியாத நினைவு.

உண்மையான முயற்சி இருப்பின் வாழ்வில் நிறைவைப் பெற்றுவிடலாம் என்பதற்கு ஓர் உதாரணம் நித்திலா கல்விக் கூடம்.

### கிராம பொருளாதார வளர்ச்சித் திட்டம்

செவ்விக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைத்து விடலாம்



மிதுலா

அதன் விளைவு தான் பள்ளிக்கூடம் மற்றும் திட்டங்களெல்லாம் என்றார் மிதுளா.

### மாலதி தும்புத்தொழிற்சாலை

பூம்புகாரில் இயற்பெயர் சிற்பிஓடை. பூம்புகார் என்ற நாமகரணம்பின்னர்தான் சூட்டப்பட்டது இது நெய்தல்கிராமம். ஆனால் இங்கிருக்கும் மக்களின் பிரதான தொழில் மீன் பிடி அன்று. கரையோர மீன் பிடித் தொழிலில் சிலகுடும்பங்கள் ஈடுபட்டுள்ளன. ஆனால்

### மதன்

மீன் பிடியை இந்தக் குடும்பங்களின் பரம்பரைத் தொழில் என்று கருதமுடியாது. இங்கு வாழ்பவர்கள் பல்வேறு இடங்களிலுமிருந்து குடியமர்த்தப் பட்டவர்கள். மீன்பிடி, கூலி வேலை. வயல் வேலை, சலவைத் தொழில், மண் விற்றல், விறகு வியாபாரம் போன்ற வேலைகளில்ஈடுபடுகிறார்கள். குடும்ப வருமானம் பற்றாக் குறையாக இருப்பதால் பெண்களும் வயல்வேலைமுதல் மா, தூள் இடிப்பது வரை பல வேலைகளைச் செய்து வருமா

(6 ஆம் பக்கம் பார்க்க)

# குதூகலம்

### நடுவானில்

ஒரு 747 ரக விமானம் அத்திலாந்திக்கின் மேல் பறந்து கொண்டிருந்தது. பயணத்தின் பாதி தூரத்தைக் கடந்த நிலையில் ஒலிபெருக்கியில் கப்டனின் குரல் கேட்டது.

''கவனியுங்கள் பயணிகளே, நாங்கள் என்ஜின்களில் ஒன்றை இழந்துவிட்டோம். ஆனால் இருக்கும் மூன்றுடனும் நாங்கள் இலண்டன் போய் விடலாம். அதனால் ஒரு மணித்தியாலம் தாமதமாகும்.''

ஒரு மணித்தியாலம் சென்றபின் மற்றொரு அறிவித்தல் கேட்டது. ''மற்றொரு என்ஜினை இழந்து விட்டோம் எனினும் நாங்கள் இரண்டுடன் பறக்கலாம். ஆனால் இரண்டு மணித்தியாலம் தாமதமாகும்.''

சிறிது நேரத்தின் பின் கப்டனின் குரல் மீண்டும் ஒலித்தது.

''இப்போதுதான் மூன்றாவது என்ஜின் செயலிழந்தது. ஒரு என்ஜினுடன் போய்ச் சேர்ந்து விடலாம் நம்புங்கள். ஆனால் மூன்று மணித்தியாலம் தாமதமாகும்.''

இவ்வேளை அதிர்ச்சியடைந்த ஒரு பயணி சொன்னது: ''கடவுளே ... நாங்கள் இன்னும் ஒரு என்ஜினை இழக்க நேரிட்டால் இரவு முழுவதும் இங்கேயே நிற்கவேண்டி வருமே.''

ஆசிரியர்:

''வரலாற்று ரீதியாக 1991 இன் அதிசயம் ஒன்று சொல் பார்க்கலாம்.''

மாணவன்:

''யாழ்ப்பாணத்தில் ஒரு சன்லைட் கட்டி 100 ரூபா விற்றது.''

### கொம்யூனிசம்

ஒரு வயோதிபமாது கிறெம்ளின் மாளிகையின் உள்ளே சென்று ''பொதுச் செயலாளரைப் பார்க்க வேண்டும்,'' என்றாள்.

மிக்கெய்ல் கொர்பசேவ் அவளை உள்ளே அழைத்து ''உங்களுக்கு என்ன உதவி வேண்டும்?'' என்று கேட்டார்.

'' ஒரு கேள்வி மட்டும். கொம்யூனிசத்தைகண்டு பிடித்தவர் ஒரு அரசியல்வாதியா? அல்லது விஞ்ஞானியா?'' என்று கேட்டாள் அவள். ''ஒரு அரசியல்வாதி'' என்றார் கொர்பசேவ்.

''அதுதான் தெரியுதே ஒரு விஞ்ஞானி எனின் அதை முதலில ஒரு எலியில் பரீட்சித்துப் பார்த்திருப்பார்'' என்றாள் அவள்.

### எது அதிசயம்?

மூன்று சிறுவர்கள் தமது தந்தையரைப் பற்றி தற்பெருமை பேசிக்கொண்டனர். ஒருவன் சொன்னான் -

என் அப்பா சுட்டால் தவறாது, அவரைப்போல் யாரும் ஓட முடியாது. குண்டு குறியிலக்கில் படுமுன்பே அவர் விழுந்ததை எடுத்துவிடுவார்.

அது பெரிதல்ல என்று சொன்ன இரண்டாவது சிறுவன், என் அப்பா 500 யார் தூரத்தில் தெரிந்த மான் ஒன்றைச் சுட்டார். அது விழு முன்பே அதை எடுத்து விட்டார் என்றான்.

அது அதிசயமாடா! எனக் கேட்ட மூன்றாமவன் சொன்னான்-

''அரசாங்க அலுவலகத்தில் வேலை செய்யும் என் அப்பா 4 30 க்கு வேலைவிட்டு வெளியேறுவார். ஆனால் 3.45க்கு வீட்டில் நிற்பாரடா.

★ ★ ★

### ஏட்டுப்படிப்பு

இரண்டு வன ஆராய்ச்சியாளர்கள் ஒரு பயங்கரத் தோற்றமுள்ள சிங்கத்தை எதிர்கொண்டனர்.

''அமைதியாக இரு காட்டு மிருகங்களைப்பற்றி அந்தப் புத்தகத்தில் வாசித்ததை நினைவிற் கொள். நேராக நின்று அதன் கண்களை உற்றுப் பார்த்தால் அது திரும்பி ஓடிவிடும்'' என்றார் பின்னால் நின்றவர்.

''உண்மை நீ அந்தப் புத்தகத்தைப் படித்திருக்கிறாய். நானும் படித்திருக்கிறேன். ஆனால் சிங்கம் அதைப் படித்திருக்குமோ! என்றார் முன்னால் நின்றவர்.

★ ★ ★

ஒரு போரில் உன் தலைக் கவசத்தை மட்டும் இழந்து விடாதே. பின்னால் ஹெல்மட் அணிவதற்கு இடமில்லாமல் போய்விடும்.

★ ★ ★

''நீ ஒரு நீர் மூழ்கியில் வேலைசெய்யவிருப்புகிறாயா? ''வேண்டாம் யன்னல்களை மூடிக்கொண்டு என்னால் நித்திரை செய்யமுடிவதில்லை.''

தொகுப்பு:
**எஸ். பி. கே.**

### வெற்றிக்கால்

அசைவ ஹோட்டலில், மதிய உணவை உட்கொண்டபடி, எக்ஸ்ரா 2 நண்டுக்கு ஆடர் கொடுத்தான் ஒருவன்.

அவன் முன்னால் வைக்கப் பட்ட நண்டுகளைப் பார்த்து விட்டு. ''வெயிட்டார், இந்த நண்டுக்கு ஒரு கால் மட்டும் இருக்கே?'' என்றுகேட்டான்.

''மன்னிக்கவும் ஐயா, சில சமயம் நண்டுகள் கடலில் சண்டையிடும்'' என்றான் வெயிட்டர்.

''அப்படியென்றால் வெற்றி பெற்ற நண்டைக் கொண்டு வா'' என்றான் அவன்.

★ ★ ★

என் குழந்தை ஒரு ஊசியை விழுங்கி விட்டான். ஆனால் பயமில்லை. அது ஒரு Safety pin.

# சூரிய குடும்பத்தில் அங்கத்தவர் எண்ணிக்கை அதிகரிக்குமா?

அமெரிக்காவின் வாஜேயர்-2 என்னும் விண்வெளி ஓடம் நீண்ட நெடும் பயணத்தை மேற்கொண்டுஇறுதியில் நெப்டியூன் கிரகத்திற்கு மிக அண்மையாகச் சென்றுள்ளது. அதுதன் 12 வருட பயணத்தில் நான்கு பில்லியன் கிலோமீற்றர் தூரத்தைக்கடந்துள்ளது: இது கண்டுபிடித்து அனுப்பியிருக்கும் பல தகவல்களின்பெறுமதி விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளின் பின்னர்தான் தெரிய வரும்.

சூரியனைமையமாககொண்டு இயங்கும் ஒன்பது கிரகங்களில் 18ஆம் நூற்றாண்டில் புதன், வெள்ளி பூமி,செவ்வாய் வியாழன்,சனி ஆகியஆறுகிரகங்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. 1781 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி வில்லியம் ஹெர்ஷல் என்பவர்சூரியகுடும்பதின் ஏழாவது கிரகமாகிய 'யுரேனஸ்' ஐ கண்டுபிடித்தார்.

யுரேனஸின் இயக்கத்தை ஆராய்ந்த விண்வெளி அறிஞர்கள் அதன் இயக்கம் மற்றவற்றின் இயக்கங்களிலிருந்துமாறுபடுவதை அவதானித்தார்கள் தாம் ஏற்கனவே அறிந்திருந்த விதிகளுக்கு மாறாக யுரேனஸின் இயக்கம் இருப்பதற்கு வேறோர் விண்பொருள் காரணமாக இருக்க வேண்டுமென ஊகித்தனர்.

சிலவேளைகளில் இது கண்டுபிடிக்கப்படாத கிரகமொன்றின் பாதிப்பினால் ஏற்படுகிறதா எனஆராய்ச்சியாளர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது ஆங்கிலப் பேராசிரியர் ஆடம்ஸ் என்பவரும் பிரெஞ்சுப் பேராசிரியர் லெவேறியர் என்பவரும் கொள்கையளவில் வேறு கிரகங்கள் இருப்பதற்கான ஆதாரங்களை முன் வைத்தனர்.

இதற்கு அமைய வானத்தை நுண் தொலைக்காட்டியினால் ஆராய்ந்து கொண்டிருந்த விண்வெளி ஆராய்ச்சியாளர்களுக்கு 1846ஆம் ஆண்டு செப்டெம்பர் 26 ஆம் நாள் நெப்டியூன் தென்பட்டது.

பூமி, சூரியனைச் சுற்றிவர 365.25 நாட்கள் எடுப்பதாக நாம் கொள்கிறோம்.இது ஒரு வருடம் எனப்படுகிறது. இதேபோல் நெப்டியூன் சூரியனைச் சுற்றிவர 165 வருடங்கள்எடுக்கும் என கணிப்பிடப்பட்டுள்ளது.இதன் காரணமாக நெப்டியூன் கண்டு பிடிக்கப்பட்டபினஇதன்பூரணமான சுற்றுப்பாதை இதுவரை அவதானிக்கப்படவில்லை.

நெப்டியூன் கிரகத்தையும் அதன் உப கிரகங்களையும் ஆராய என 1977ஆம் ஆண்டு வாஜேயர் -2 எனும் விண்வெளி ஓடம் அமெரிக்காவால் அனுப்பிவைக்கப்பட்டது. அது தனது பயணத்தில் 1979 ஆம் ஆண்டு வியாழன் கிரகத்தையும், 1980 நவம்பரில் சனிக் கிரகத்தையும், 1986 ஆம் ஆண்டு யுரேனஸ் கிரகத்தையும் கடந்து 1989 யூன் மாதத்தில் நெப்டியூன் கிரகத்தை அடைந்தது.அதன் செயற்பாடுகள்திட்டமிட்டபடிஅமைந்திருப்பதாகவிஞ்ஞானிகள்தெரிவிக்கின்றனர்.

வாஜேயர் கொடுத்துள்ள தகவல்களிலிருந்து பல அரிய தகவல்களை பெற முடியும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இங்கிருந்து வாஜேயர் அனுப்பப்படும் போது நெப்டியூனுக்கு இரண்டுதுணைக்கோள்கள் மட்டுமே இருப்பதாகக்கருதப்பட்டது. ஆனால் வாஜேயர் கொடுத்த தகவல்களின்படி 4 துணைக் கோள்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நெப்டியூனின் கட்டமைப்பு இரண்டு அடுக்குகளை கொண்டதென அறியப்பட்டுள்ளது. அதன் மேற்புறம் பனிப்பாறைகளாலும் உட்புறம் கற்களாலும் ஆக்கப்பட்டுள்ளது அதன் வளிமண்டலத்தில் கீலியம், ஐதரசன், மெதேன் போன்ற வாயுக்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நெப்டியூனில் நிலவும் கால நிலை, வெப்பம். சுற்றுச்சூழல் ஆகியவைபற்றியதகவல்களை வாஜேயர் பூமிக்கு அனுப்பி வைத்துள்ளது. இதன்படி சில இடங்களில் திரவ நிலையில் மீதேன் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாஜேயர் அனுப்பப்பட்டு 12 ஆண்டுகள் ஆவதால் அதில் பொருத்தப்பட்டுள்ள கருவிகள் பலவீனமான நிலையை அடைந்து விட்டன. நெப்டியூன் சூரியனிலிருந்து வெகு தூரத்தில் இருப்பதால் சூரிய ஒளி மூலம் சக்தியைப் பெறும் கருவிகள் இங்கு பயனற்றவை ஆகிவிட்டன. இதனால்புளூட்டோனியத்திலிருந்து பெறப்படும் அணுசக்தியைப் பயன்படுத்தி மூன்று மின்பிறப்பாக்கிகள் (Generators) இயங்க வைக்கப்பட்டு அதன் மூலம் கருவிகள் இயங்க வைக்கப்படுகின்றன.

வாஜேயர் அனுப்பும் தகவல்களை பெறுவதற்கு அவுஸ்திரேலிய, ஸ்பெயின், யப்பான். கலிபோர்ணியா, நியூமெக்சிக்கோ ஆகிய இடங்களில் மிகப்பெரிய அன்ரனாக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன சோவியத்தைச் சேர்ந்த இரு விஞ்ஞானிகள் உட்பட பல நாட்டு விஞ்ஞானிகளும் இந்த ஆராய்ச்சி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

பூமியிலிருந்து வாஜேயருக்கு அனுப்பி வைக்கப்படும் கட்டளைகள் அதனைச் சென்றடைய 4 மணித்தியாலங்கள் எடுக்கின்றன. இதேபோல் வாஜேயர் அனுப்பி வைக்கும் தகவல்கள் பூமியைவந்தடைய 4 மணிநேரம் எடுக்கிறது.

வாஜேயர், நெப்டியூனின் உபகிரகமாகிய 'டிரைட்டனை' மிக் அண்மையில் சென்று படம் பிடித்துள்ளது.

சூரிய குடும்பத்தின் எட்டாவது கிரகமாகிய நெப்டியூன், ஒன்பதாவது கிரகமாகிய புளூட்டோ என்பனவற்றின் இயக்கங்களை ஆராயும்போது அவற்றில் கூட சில வேறுபாடுகள் காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது கிரகங்களின் இயக்கம் குறித்து விஞ்ஞானிகளாலும் அறிஞர்களாலும் கண்டுபிடிக்கப்பட்ட தத்துவங்கள், எடுகோள்கள், விதிகள் என்பவற்றிலிருந்து சிறிதளவு விலகியே நடந்து கொள்கின்றன.

இதிலிருந்து சூரிய குடும்பத்தில் மேலும் அங்கத்தவர்கள் இருக்கின்றனரா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இது பற்றி திட்டவட்டமான முடிவுகள் எதுவும் கிட்டவில்லை. எனினும்வாஜேயர் சிலவேளைகளில் அந்தக் கேள்விக்கு விடையளிக்கலாம்.

தொகுப்பு:

**வேலவன்**

---

## கோழி

னத்தைப் பெறுகிறார்கள்.

ஆனால் பூம்புகார் மக்கள் வறுமைக்கோட்டைத் தாண்ட முடியாத நிலையில்துன்பப்பட்டார்கள்.பூம்புகார் மக்களுக்கு கை கொடுத்து உதவும் வகையில் மாலதி தும்புத் தொழிற்சாலை என்ற பெயரில் தொழிற்சாலை ஒன்று இயங்குகிறது.

முதற்கட்ட முயற்சியாக 22 பேர்களுக்கு இத் தொழிற்சாலையில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. பத்துக் கயிறு திரிக்கும் இயந்திரங்களுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த தொழில் ஸ்தலம் காலப் போக்கில் விஸ்தரிக்கப்படும் என்கிறார் மிதுலா. விளக்குமாறு, தும்புக்கட்டை, கயிறு திரித்தல், தும்படித்தல் போன்ற முயற்சிகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. எட்டு மணிநேர வேலை. துண்டுக்கணக்கில் வேதனம் வழங்கப்படுகின்றது.

மிதுலா கிராம பொருளாதார உற்பத்தித் திட்டத்தில் போட்டிருந்த பட்டியலில் இன்னும் சிலவற்றைச் சொல்லியாக வேண்டும்.

★ விதவைகள் மற்றும் கணவனை விட்டுவாழ்பவர்களுக்கு குடும்பமொன்றுக்கு ஐந்து கோழிகள் மூலம் வழங்கப்பட்டன.மூன்றுமாதங்களுக்கிடையில் பதினைந்து கோழிக்குஞ்சுகள் தரவேண்டும் என்றநிபந்தனையுடன் இக் கோழிகள் வழங்கப்பட்டன.

★ முப்பத்திநான்கு குடும்பங்களுக்கு தலா ஒரு குடும்பத்துக்கு ஒரு பசு வழங்கப்பட்டது. முதல் ஈற்றுக் கன்றைத் தர வேண்டும் என்பது முன்நிபந்தனையாகும்.

★ பனை வேலைப் பயிற்சி மூன்று மாதங்களுக்கு வழங்கப்பட்டது.முப்பது பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டது. மக்கள் பனைவேலைப் பயிற்சியின் முக்கியத்துவத்தைஉணராமல் இருப்பது விசனத்துக்குரியது என்கிறார் மிதுலா.

முனங்கு நாவலடி, மணியந்தோட்டம், உதயபுரம் ஆகிய கிராமங்களில் விஸ்தரிப்புத் திட்ட வேலைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

முனங்கில் படிப்பகம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க மிஷன் பாடசாலையில் மேலதிக கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

நாவலடியில் மக்கள் சந்தை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையத்தின் வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன. குழந்தை மடுவம் ஒன்றும் மிக விரைவில் அமைக்கப்படும்.

மணியந் தோட்டத்தில் பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றது. முதலுதவி வகுப்புக்கள் தொடங்கப்பட்டுள்ளன. மணியந் தோட்டம், உதயபுரத்தையும் சேர்த்து சுமார் 600 குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம் கட்டும் பூர்வாங்கத் திட்டம் தயாராகி வருகிறது. நாவலடியும் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

உதயபுரத்தில் எந்த ஒரு பொது அமைப்பும் முன்பு இல்லை. பாலர் பாடசாலையும், சனசமூக நிலையமும் உருவாக்கப்பட்டுள்ளன. குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் கூட இல்லாத கிராமம். மிகச்சிறிய நிலப்பரப்பில் (வளவுகள்) குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். அடிப்படை வசதிகளை வழங்கவும், குடியிருப்பு நிலத்தின் அளவை விஸ்தரிக்கவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது;

### ஆரம்ப சுகாதார நிலையம்

மருத்துவ வசதிகள்இல்லாத பின் தங்கிய நிலையிலேயேஇக் கிராமம் ஆரம்பத்தில் இருந்தது. பொருளாதார வகையில் பின்தங்கியவர்கள் நகரவாழ்க்கையின் ஒடுக்கு முறையிலிருந்து தப்பி பூம்புகாரிலிருந்து குடியேறியிருக்கலாம். ஆனால் இங்கு குடியேறியவர்கள் ஆரம்ப சுகாதார வசதிகள் இல்லாமலேயே பல காலம் வாழ்ந்து வந்தனர்.

பூம்புகாரில்இப்போதுகிராம பொருளாதார வளர்ச்சித் திட்டத்தினரின் மேற்பார்வையின் கீழ் ஒருஆரம்ப சுகாதாரநிலையம் செயற்படுகின்றது. சுமார் 180 குடும்பங்கள் இதனால் நன்மை பெறுகின்றன.

ஆயுர்வேத வைத்தியர் கிழமை நாள்களில் முழுநேரச் சேவையாற்றி வருகிறார். ஞாயிறு. சனி போன்ற விடுமுறை நாள்களில் பல்கலைக் கழக வைத்தியபீட மாணவர்களும் மனித நேயத்துடன் செயலாற்றுகின்றார்கள். இணைந்தாற்போல் இவர்கள் உதவியுடன் முதலுதவி வகுப்பொன்றும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

மருத்துவம் நோயை ஒழிக்கலாம். ஆனால் அவற்றை உருவாக்கி விடும் சமுதாய அமைப்பை அதனால் ஒழிக்க முடியுமா? வெறுமனே காயத்துக்குக் கட்டுப்போடும் நிலையமாக மட்டும் இந்தச் சுகாதார நிலையம் இயங்கவில்லை இந்த நிலையத்தில் பாசம், மனித அன்பு எல்லாம் ஒன்றிணைந்து புனருத் தாரணம் செய்யும் பணிகளும் இடம் பெறுகின்றன.

இப் பகுதிகளில் வாழும் மக்கள் விடுதலையின் தேவையை உணர்ந்திருக்கிறார்கள் என்கிறார் மிதுலா. தங்களுக்கென்று எதிர்காலம் இருக்கிறதா என்ற மக்கள், மண்ணில் வாழ்வதற்கு எதிர்காலம் இருக்கிறது என்பதை இப்போது உணர்ந்துள்ளார்கள்.

---

## தாய்

யைத் தொடர்ந்து, சில ஆண்டுகளில் பிரெஞ்சு மக்களின் மன்னனாக நெப்போலியன் முடிசூடிக் கொண்டான்.

ஆம்.... நெப்போலியன் இப்பொழுது பிரான்ஸ் நாட்டின் சக்கரவர்த்தி!

திறமை, வீரம், அயராத உழைப்பு, எல்லாவற்றிலும் மேலாகச் 'சந்தர்ப்பம்' ஒரு சாதாரண குடும்பத்து மனிதனைச் சக்கரவர்த்தியாக உயர்த்தியது.

போற்றப்பட வேண்டிய விஷயம் தான் இது.

அப்படியானால் கோசிக்காவின் விடுதலை?

அவனுடைய தாயின் கனவு?

தாய் மண்ணின் சுதந்திரம் பெறுவதற்காகவே வளர்க்கப்பட்ட அந்த இளைஞனுடைய வீரம் – அந்த மண்ணை அடிமைப்படுத்துகின்ற அதே ஆட்சி பீடத்தில் அவனை ஏற்றி வைத்த விந்தையை வரலாறு இந்த உலகம் உள்ளவரைக்கும் புகழ்பாடும்......

ஆனால் இலத்தீசியா?

அந்தத் தாய் என்ன செய்தாள்?

சுதந்திரத்தை மறந்தவனைத் தனது மகன் என்று ஏற்க மறுத்தாள்.

தாயிடம் அளவற்ற பாசம் கொண்டிருந்த நெப்போலியன் அவளைப் பார்ப்பதற்கு ஆவலுடன் எடுத்த முயற்சிகள் யாவும் வீணாகிப் போயின.

தாயிடமிருந்து அவனுக்குக் கடிதங்கள் வருவது கூட நின்று போயிற்று.

வெற்றிமேல் வெற்றியீட்டிய அந்தச் சக்கரவர்த்திக்குப் பெற்ற தாயின் பாசம் வெற்றி கொள்ள முடியாத விஷயமாகியபோது, தனது இதயத்தின் ஏக்கத்தை யெல்லாம் எழுத்தில் வடித்து, அம்மாவுக்கு ஒரு கடிதம் அனுப்பினான் மகன்.

பதில் கடிதம் வந்தது.

எப்படி வந்தது?

'அதிகாரமே எனது தாய்' 'அதிகாரமே எனது மனைவி', (Power is my mistress) அதிகாரமே வாழ்வு என்று இறுமாந்திருந்தவனுக்கு - அந்த அதிகாரம் ஒரு உத்தமியிடம் தோற்றுப்போய் விட்ட செய்தியைச் சுமந்து கொண்டு வந்தது.

'பிரான்ஸ் நாட்டின் சக்கரவர்த்திக்கு–

சுதந்திரம் பெறத் துடித்துக் கொண்டிருக்கும் கோசிக்கா என்ற எனது தாய் மண்ணிலிருந்து, இந்த மண்ணின் ஒரு பிரஜை நான் என்ற பெருமிதத்துடன் இலத்தீசியா எழுதுகிறேன்.

எங்கள் தாயகம் பிரான்ஸ் நாட்டின் பிடியிலிருந்து நிச்சயம் ஒருநாள் விடுதலை அடைந்தே திரும். இந்த மக்கள் சுவாசிக்கின்ற ஒவ்வொரு மூச்சுக்காற்றிலும் சுதந்திரம் என்ற இலட்சியமே உயிர்நாடியாய் இழையோடுகிறது. சுதந்திரம் என்றால் என்ன என்பதைக் கூட நீ மறந்து விட்டாயோ என்னவோ .... உன்னைப் பொறுத்த வரை இப்போது அது விளங்கிக் கொள்ள முடியாத விஷயமாகக் கூடப் போயிருக்கலாம். நாங்கள் அடிமைத்தனத்துக்கு எதிராகப் போராடுபவர்கள். எங்கள் கோசிக்காத் தீவை அடிமைப்படுத்தி இருக்கின்ற நாட்டின் சக்கரவர்த்தி என்ற வகையில் இனி நீயே எனது முதல் எதிரி.

உன்னுடையது-சாம்ராஜ்ய விஸ்தரிப்புக்கான பேராசை.

எங்களுடையது - சுதந்திரம் என்ற புனித இலட்சியத்திற்கான போராட்டம். பிரான்ஸ் நாட்டை மட்டுமல்ல இந்த உலகம் முழுவதையுமே ஆளுவதாயினும் கூட, அந்த வாழ்வைவிட உனது தாய் மண்ணின் சுதந்திரத்துக்கான போராட்டத்தில் அடைகின்ற வீரச்சாவு உன்னதமானது என்பதை எப்படி மறக்க முடிந்தது உன்னால்?

கோசிக்காவின் விடுதலையை வென்றெடுக்க இந்த மண்ணில் ஒரு வீரன் இல்லாமலா போய்விடுவான். கட்டாயம் இருப்பான் இனி அவன் தான் எனது மகன். நிச்சயமாய் நீயல்ல......

கோசிக்காவின் மலைகள் கூட உன்னை மன்னிக்கப் போவதில்லை!

ஒரு சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி, தாய் மண்ணின் சுதந்திரத்தையே உயிராக மதித்த தாயின் முன், அவளுடைய உன்னதமான உணர்வுகளின் முன்-

தோற்றுத்தான் போய் விட்டான்-

ஆம்... அந்தத் தாயைக் காணுகின்ற பாக்கியம் இறுதி வரைக்கும் நெப்போலியனுக்குக் கிடைக்கவேயில்லை.

### பஞ்சாப் மாநிலத் தேர்தல்

# பஞ்சாப்பிற்கு இலாபம் எதுவுமில்லை; இந்திரா காங்கிரசிற்கு இலாபம் உண்டு

குண்டு வெடிப்புக்கள், வன்முறைகள், பகிஷ்கரிப்பு என்பனவற்றிற்கு மத்தியில் இந்தியப் பஞ்சாப் மாநிலத் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. பல இலட்சக் கணக்கில் இராணுவம் குவிக்கப்பட்ட பலத்த பாதுகாப்பு மத்தியில் நடந்த இத் தேர்தலில் 25 வீதம் அளவிலான மக்களே வாக்கெடுப்பில் கலந்து கொண்டார்கள்.

பஞ்சாப்பில் நடந்து முடிந்த இத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி எதிர்பார்த்த பலனை அடைந்தது. சட்டசபைக்கான 117 மொத்த ஆசனங்களில் 87 ஆசனங்களையும், லோக்சபாவிற்கான 13 ஆசனங்களில் 12 இந்திரா காங்கிரஸ் கட்சி கைப்பற்றியது இதன் மூலம் பஞ்சாப் மாநில சட்டசபையை இந்திரா காங்கிரஸ் கைப்பற்றியுள்ளதோடு, மத்தியில் சிறுபான்மை அரசாங்கத்திற்கு வலு சேர்ப்பதாகவும் இத் தேர்தல் முடிவுகள் அமைந்தன. ஆனால், இத் தேர்தல் இந்திரா காங்கிரஸிற்கு வலுச் சேர்த்தது போன்று இந்தியாவிற்கு வலுச் சேர்த்ததா என்றால் இல்லை என்றே கூற வேண்டும். அத்தோடு பஞ்சாப் பின் சமாதானத்தையும் இத்தேர்தல் கொண்டு வந்து விடப் போவதில்லை.

1984 ஆம் ஆண்டிலிருந்து ஜனாதிபதி ஆட்சியின் கீழ் தொடர்ந்து இருந்து வந்த பஞ்சாப் மாநிலத்தில் தேர்தலை நடத்த வேண்டும் எனக் கடந்த வருடம் கலைக்கப்பட்ட சந்திரசேகர் அமைச்சரவை முடிவு எடுத்திருந்தது. இந்தியாவில் நடந்த பொதுத் தேர்தலுடன் பஞ்சாப் தேர்தலும் நடத்துவதாக அறிவிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்றன.

ஆனால் அப்பொழுது இந்திரா காங்கிரஸ் கட்சி பஞ்சாப் மாநிலத் தேர்தலை வன்மையாக எதிர்த்தது. அன்றைய இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி தேர்தலைத் தடுப்பதற்காக பகீரதப் பிரயத்தனமும் செய்தார். அதற்கு இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமனும் உடந்தையாக இருந்தார்.

பஞ்சாப் மாநில பாதுகாப்பு நிலவரங்கள் சரியாக இல்லை எனச் சுட்டிக்காட்டி தேர்தலைப் பின்போடுமாறு ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் அப்போதே பிரதம மந்திரி சந்திரசேகரைக் கோரினார். சந்திரசேகர் முதலில் மறுத்தாலும் பின்னர் மாநில ஆளுநர்களின் சிபார்சின்படி பாதுகாப்பு நிலைகள் திருப்திகரமாக இல்லை என்ற ரீதியில். பஞ்சாப் அஸாம் தேர்தல்கள் பிற்போடப்பட்டன. ஆனால், தேர்தல் பிற்போடப்படுவதற்கு முக்கிய காரணமாக இந்திரா காங்கிரஸ் கட்சியே இருந்தது தேர்தல் பிற்போடப்படாவிட்டால், தேர்தலை பகிஷ்கரிப்போம் எனவும்காங்கிரஸ்கட்சி அன்று மிரட்டியது

காங்கிரஸ்கட்சி பஞ்சாப் தேர்தலைப் பிற்போடுமாறு வற்புறுத்தியமைக்குக் காரணம் அம் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான அரசியற் சூழ்நிலை இருந்தமையேயாகும் ஏனைய மாநிலங்களில் தேர்தல் அவதானிப்புகள் இந்திரா காங்கிரஸிற்கு ஓரளவு சாதகமாக இருப்பதாகத் தெரிவித்தபோதும், அமோக வெற்றிக்கு வாய்ப்பில்லை என்பது தெளிவாக உணரப்பட்ட நிலையில், பஞ்சாப் அஸாம் தேர்தலை நடத்துவதன் மூலம் பாராளுமன்றத்தில் மேலும் எதிரணிகளைப் பலப்படுத்த காங்கிரஸ் கட்சி விரும்பவில்லை. இதுவே பஞ்சாப்பிலும், அஸாமிலும் தேர்தலை நடத்தவிடாமல் தடுத்தமைக்குக் காங்கிரஸ்கட்சி முயற்சித்தமைக்கு முக்கிய காரணமாக இருந்தது.

ஆனால், தற்போதைய சூழ்நிலை சற்றுமாறுபாடானதாக உள்ளது. கடந்த வருடம் தேர்தல்அறிவித்ததில்இருந்தே தீவிரவாதிகள் தேர்தலை எதிர்த்து வந்தனர், அகாலிதளம் தேர்தலில்பங்கு பற்றுவதா, விடுவதா என்ற குழப்பத்தில் இருந்தது. இந்நிலையில், தமக்குச்சாதகமான சூழ்நிலையில் இந்திரா காங்கிரஸ் கட்சி ஒரு தேர்தலை நடத்த திட்டமிட்டது. தீவிரவாதிகளும் அகாலிதளமும் போட்டியிடாதபட்சத்தில் காங்கிரஸ் தேர்தலில் அமோக வெற்றி பெறும் என்பதை காங்கிரஸ் சரியாகக் கணிப்பிட்டிருந்தது.

## சிறுபான்மை அரசாங்கம்

பஞ்சாப் தேர்தலுக்கு முன் இருந்த லோக்சபா 521 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. இதில் 231 பேர், ஆளும் இந்திராகாங்கிரஸ் கட்சியினராகும் அதனது தோழமைக்கட்சிகள் 18 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது தனித்து இந்



பி. வி. நரசிம்மராவ்

திராகாங்கிரஸ் அறுதிப்பெரும்பான்மையைப் பெறுவதற்கு30 உறுப்பினர்கள் குறைவாக இருந்தனர். தோழமைக் கட்சிகளுடன் சேர்ந்தால் 12 உறுப்பினர்கள்குறைவாக உள்ளனர்

இந் நிலையில் இந்திரா காங்கிரஸ்கட்சி இவ்வருடத்தில் முக்கிய இருபெரும் சவால்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது ஒன்று தற்பொழுது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்படல் வேண்டும் இவ்வரவு செலவுத் திட்டம் லோக்சபாவில் தோற்கடிக்கப்படுமானால், அரசாங்கம் இராஜிநாமாசெய்வதைத் தவிர வேறுவழி இல்லை.

இரண்டாவது எதிர்வரும் ஜூலைமாதத்திலும், செப்ரெம்பர் மாதத்திலும் முறையே வரவுள்ளஜனாதிபதித் தேர்தலும் உப ஜனாதிபதித் தேர்தலும் ஆகும் இதில் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெறுதல் என்பதே அவர்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அடுத்த அம்சமாகும். இவ்விருதேர்தல்களிலும் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் வெற்றிபெற வேண்டுமானால் மக்களவையில் மேலும் 40 எம்பிக்களும், மாநில சட்ட மன்றங்களில் 100 எம். எல். ஏக்களும் தேவை.

இதேவேளை நரசிம்மராவ் தலைமையிலான இந்திராகாங்கிரஸ் சிறுபான்மை அரசாங்கம் கடந்த வருடம் பதவி ஏற்றபோது இருந்த அரசியற் சூழ்நிலை தற்பொழுது இல்லை. சபாநாயகர் தெரிவின் போது எதிர்க்கட்சிகளுக்கும் குறிப்பாக பாரதீய ஜனதாக்கட்சிக்கும் காங்கிரஸிற்கும் இடையில் இருந்த விட்டுக் கொடுப்புக்கள் ஜனாதிபதி தேர்தலிலும் இருப்பதற்கான வாய்ப்புக்கள் தெரிவதாக இல்லை. காங்கிரஸ்கட்சியின் போக்கை பாரதீய ஜனதாக் கட்சியும், இடதுசாரிகளும் தீவிரமாகக் கண்டிக்கத் தொடங்கியுள்ளன. இதனைக் கடந்த இரு தினங்களில் நடந்த லோக்சபா கூட்டங்களில் ஏற்பட்ட அமளிதுமளிகளில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

இந்நிலையிலேயே, பஞ்சாப் தேர்தலை இந்திரா காங்கிரஸ் கட்சி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. கடந்த வருடம் தேர்தல் இடம் பெற்றால் பகிஷ்கரிக்கப்போவதாக தெரிவித்த இந்திராகாங்கிரஸ் கட்சி, தற்பொழுது தேர்தல் நடைபெற்றால் தீவிரவாதிகளும், அகாலிதளத்தைச் சேர்ந்த பல பிரிவினரும் தேர்தலில் பங்கு பற்றமாட்டார்கள் என்ற நிலையை நன்குணர்ந்து தேர்தலை நடத்தியுள்ளது.

இத் தேர்தலின் மூலம் லோக்சபாவில்காங்கிரஸ்கட்சியின் பலம் சற்று அதிகரித்துள்ளது.இதனால் காங்கிரஸ் அறுதிப் பெரும்பான்மை பெற இன்னும் குறைந்தளவுஉறுப்பினரே தேவை என்ற நிலை உருவாகியுள்ளது. பஞ்சாப் மாநில உறுப்பினர்களையும் சேர்த்து மொத்தமுள்ள534 உறுப்பினர்களில் இ. காங்கிரஸ் உறுப்பினர் 243 ஆகும். அதன்தோழமைக் கட்சிகளுடன் சேர்த்து 261 ஆகவும் இருக்கும். இது அறுதிப் பெரும்பான்மைக்கு ஆறு உறுப்பினர் மட்டுமே குறைவாகும். இதில் ஜனதாதளத்தில் இருந்து பிரிந்துள்ள நான்கு எம். பிகளின் ஆதரவும், மேலும் சில உதிரிக் கட்சிகளின் ஆதரவும் கிட்டும் பட்சத்தில் காங்கிரஸ்கட்சி வரவு செலவுத்திட்ட நெருக்கடியில் இருந்து தப்பித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு பெருமளவு உண்டு.

மேற்கூறப்பட்டவாறுவரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றுவதில் இந்திரா காங்கிரசிற்கு பஞ்சாப் தேர்தல் ஓரளவு சாதக நிலையை உருவாக்கி இருப்பது போன்று ஜனாதிபதி உபஜனாதிபதித் தேர்தலுக்கு போதுமான சாதக நிலையை உருவாக்கியுள்ளது என்று கூறிவிட முடியாது.

பஞ்சாப் மாநில ஆட்சியைக் கைப்பற்றினால்.மாநில சட்ட மன்றங்களில் தேவையாக இருந்த சுமார் 100 எம். எல். ஏ. க்குப்பதிலாக 87எம். எல்.ஏ. கள் கிடைக்கப் பெற்றிருப்பினும், தேவையான 40 எம் பி. களுக்குப் பதிலாக 12 எம்.பி. கள மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளது. இந் நிலையில், ஜனாதிபதி உப ஜனாதிபதித்தேர்தல்கள் சிறுபான்மை காங்கிரஸ் அரசாங்கத்திற்கு பெரும் ஒரு சோதனைக் களமாகஅமையும் என்றேகூறலாம்

இதேவேளை, பஞ்சாப்தேர்தலில் தீவிரவாதிகளும்,அகாலிதளமும் தேர்தலில் பங்கு பற்றாமைஇந்திரா காங்கிரஸிற்கு கிடைத்த தேர்தல் வெற்றிக்குக் காரணமாக இருப்பினும் இத் தேர்தல் மூலம் பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வு எதையும் கண்டுவிட உதவப் போவதில்லை. பஞ்சாப்பில் அமைதி திரும்பிவிடப்போவதுமில்லை. கடந்த கால காங்கிரஸ் ஆட்களினாலேயே பஞ்சாப்பில் சுதந்திரப் போராட்டம் தலைதூக்கியது. இந் நிலையில் மாநிலத்தில்மேலும் நெருக்கடிகள் அதிகரிக்கவே வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும். அதாவது தேர்தல்கள் பிரச்சினையைத்தீர்க்காது என்பதற்கு இப்பஞ்சாப்தேர்தலையும் ஓர் உதாரணமாகச்சேர்த்துக் கொள்ளலாம்.

\- ஜெயராஜ்

## இ. காங்கிரஸ் தலைவராக நரசிம்மராவ் தெரிவு

(டில்லி)

இந்திரா காங்கிரஸ் தலைவராகஇந்தியப்பிரதமர் பி.வி. நரசிம்மராவ் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளமையை முறைப்படியாக நேற்று இந்திரா காங்கிரஸ் பிரதிநிதி பேராசிரியர் பி.பி. தாகூர் அறிவித்தார்.

தலைவர் பதவிக்கான மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் இது அறிவிக்கப்பட்டதாகவும் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிடும் ஒரே ஒரு வேட்பாளர் நரசிம்மராவ் தான் என்றும் தாகூர் தெரிவித்தார்.

## மின் இணைப்புவேலைகள் அடுத்த மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

இயக்கச்சிக்கும், சுன்னாகத்திற்குமிடையேயான மின் கம்பி இணைப்பு வேலைகள் அடுத்த மாதத்தில் இருந்து ஆரம்பம் ஆகவுள்ளது எனவும். இதற்கு தேவையான பொருள்கள் மற்றும் உபகரணங்கள் கப்பல் மூலம் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. மூன்று கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இத் திருத்த வேலைகள் யாழ். மாவட்டத்திற்கு மின்சாரம் வழங்கப்படுவதற்கான ஒரு முன்னோடி நடவடிக்கை எனச் சொல்லப்படுகிறது.

## மாம்பூக்களுக்கு கிருமிநாசினி விசிறல்

மாம் பூக்களைத் தாக்கும் மாவிலைத தத்திகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த பூச்சிநாசினியும், மாமரங்களைப் பூக்கச்செய்வதற்கு ஓமோன்களும் விசிறும் பணியில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஈடுபட்டு வருகிறது தற்போது முதற் கட்டமாக நல்லூர்ப் பகுதியில் பூச்சிநாசினி, ஓமோன் விசிறும்சேவை வழங்கப்பட்டு வருகிறது. இச் சேவையைப் பெற்று பயன் பெற விரும்புவோர் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

## சிறில. - செக். வர்த்தக உறவு

சிறிலங்கா - செக்கோசெலவாக்கியாவிற்குமிடையே வர்த்தக உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக வர்த்தக வணிகத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூருக்கும் செக்கோசெலவாக்கிய தூதுவர் டாக்டர் ஜான் லிக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றுள்ளன.

இரு நாடுகளினதும் உற்பத்திப பொருட்களுக்கும் பரஸ்பரம் அதிக சந்தை வாய்ப்பை பெற்றுக் கொள்ளும் முகமாக இப்பேச்சுக்கள் இடம் பெற்றதாக அமைச்சர் மன்சூர் கூறியுள்ளார்.

## இயற்கை அழிகிறது நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

இயற்கை அழிப்பு நடவடிக்கைகளால் விலங்குகள், பறவைகள், பூச்சிகள் என்பன அருகி வருவதாக தெரிய வருகிறது. காலநிலை சூழல் மாற்றங்களாலும், விவசாய செய்கையில் இரசாயனப் பாவிப்புகளாலும் இலங்கையில் மரங்களும், பறவைகளும் விலங்குகளும், பூச்சி புழுக்களும் அழிந்துவிடும் நிலை தோன்றி வருவதாக சூழல் பாதுகாப்பு நிபுணர்கள் அச்சம் வெளியிட்டு உள்ளனர்.

காடுகள் அழிக்கப்படுவது, குளங்கள் மூடப்படுவது, இரசாயனங்கள் தெளிக்கப்படுவது செயற்கை உரங்கள் பாவிக்கப்படுவது என்பவையே இவற்றின் அழிவுக்கு பிரதான காரணங்கள் எனவும் சூழல் பாதுகாப்பு நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இவற்றை பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் எனவும் நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நைலோன் தொழிற்சாலை கொரியாவிற்கு விற்பனை

(கொழும்பு)

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நைலோன் தொழிற்சாலையின் தொண்ணூறு வீதமான பங்குகள் தெனகொரியாவின் பிரபலகம்பனியொன்றிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது' எஞ்சிய பத்து வீதப்பங்குகளும் தொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளன. சப்புகஸ்கந்தைப் பகுதியில் இருக்கும் இத் தொழிற்சாலையின் பங்குகளை இரு பத்து மூன்று கோடி ரூபாவுக்கு தென்கொரிய நிறுவனம் வாங்கியுள்ளது.

# தொண். ஆசிரியர் நியமனம் இப்போதைக்கு இல்லை

வடபகுதி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தரநியமனம் வழங்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் இல்லை என்றும் இப்பகுதிகளில் இராவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மட்டுமே தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் செய்யப்பட இருக்கின்றனர் என்றும் யாழ். கல்வித்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இல்லாத ஏனைய பகுதிகளில் உள்ள தொண்டர் ஆசிரியர்களை நியமனமாக்குவதற்கு கல்விச்சேவைகள் அமைச்சு மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

பாடசாலைகள் அனைத்தும் சீராக நடைபெற்றுகடமையில் இருக்கும் அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் களநிலையிலான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் இதன் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட முடியும் என்றும் கல்விச் சேவைகள் அமைச்சு கருதுகின்றது. இதனால் இப்பகுதிகளில் தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனமாக்கப்படுவர் என்பதற்குரிய சாத்தியம் அற்றுப் போய்விட்டது. என்று கூறப்படுகின்றது. (க)

**வன்னி**

இந்த நடவடிக்கைகுறிப்பிட்ட வரையறை கொண்டதல்ல எனவும் கேணல் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையில் சீனாவிடமிருந்து வாங்கிய நவீன ரக டாங்கிகளை பயன்படுத்தி வருவதாகவும் இந்த தாக்குதலில் கவச வாகனப் படையும் பீரங்கிப் படையும் பயன்பவதாக அவர் தெரிவித்தார்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

(29. 02. 92)



தோற்றம்: 08 - 5 - 193

மறைவு: 30 - 01 - 1992

## அமரர் இராமலிங்கம் ஜெறாட் கீத பொன்கலன் (பொங்கல்)

(ஓய்வு பெற்ற வைத்தியசாலை ஊழியர், மேற்பார்வையாளர்)

எங்கள் இதயங்களில் என்றும் வாழும் அன்பு உருவே!
உம் உருவம் எம்மைவிட்டகன்றாலும் உமது
உள்ளம் வாழுகின்றதென்றும் எம்முடன்.
சாந்தி, சாந்தி, சாந்தி.

29. 02. 92 அன்று எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக் கிருத்தியத்தில் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
தாய், மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள்.

275 ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

(2211)

# மரண அறிவித்தல்

## திருமதி கணபதி சின்னப்பிள்ளை

மந்துவிலைச் சேர்ந்த திருமதி கணபதி சின்னப்பிள்ளை 26-02-92இல் காலமானார். இவர் காலம் சென்ற திரு. சி. கணபதியின் அன்பு மனைவியும் திரு. க. நடராசா (தலைவர், பனை அபிவிருத்திச்சபை), திருமதி இ. அன்னபாக்கியம், திரு. க. செல்வத்துரை (ஸ்கந்தபுரம்), திரு. க. வே. தங்கராசா (பிரதம லிகிதர்-விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு- கச்சேரி, யாழ்ப்பாணம்), திரு. க. இராசதுரை (அதிபர் யா/நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறைக் கொத்தணி), திரு. க. இராசேந்திரம் (ஆசிரியர், கனகாம்பிகை ம. வி. கிளிநொச்சி), திரு. க. சிவராசா (ஆசிரியர் யாழ். சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் தாயாரும் திருமதி ந. யோகம்மா, திரு. நா. இராசேந்திரம், திருமதி செ. குணம், திருமதி த. பரமேஸ்வரி, திருமதி இ. தவரத்தினம், திருமதி இ. கமலாதேவி (ஆசிரியை, கிளிநொச்சி, திருவையாறு அ. த. க. பாடசாலை), திருமதி சி. சுசீலா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவர்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் 66/3 திருவையாறு, கிளிநொச்சியில் சனிக்கிழமை நடைபெறும்.

தகவல்:

யா/நடேஸ்வரக் கல்லூரி, காங்கேசன்துறைக் கொத்தனி.

க. இராசதுரை
அதிபர்

(2244)

# கொக்கிளாயில் துரித கெதியில் சிங்களக் குடியேற்றங்கள்

மணலாறு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய் பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் சிறிலங்கா அரசினால் வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் இப்பகுதியில் 128 சிங்கள மீனவர் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. இவர்களுக்கு தேவையான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு தேவையான வலைகள், படகுகள் என்பன நேற்று முன்தினம் சிறிலங்கா மீன்பிடித்துறை அமைச்சரினால் சம்பிரதாய பூர்வமாக வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நிறுவனத்தினால் மீன்பிடி அபிவிருத்திக்கு என வழங்கப்பட்ட 75 இலட்சம் ரூபா இவர்களுக்கு செலவிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## நிகழ்ச்சி இடமாற்றம்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மைதானத்தில் நாளை பி. ப. 7.00 மணியளவில் நடைபெறவிருந்த சாந்தன் இசைக் குழுவினரின் போர்க்காலஇராகங்கள், சந்தனக்காடு நாடகம் என்பன அதே கால ஒழுங்கில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

## மார்ச் 02 இல் வரலாம்

''லில்லிவில்லி'' என்ற கப்பல் எதிர்வரும் 02 ஆம் திகதி பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கப்பலில் அத்தியாவசியப் பொருள்களின் தொகுதி ஒன்றுஎடுத்துவரப்படஉள்ளது

**புலிகளின்**

கடந்த நவம்பர் மாதத்தில் இந்தக் கப்பல் இந்தியக் கடற்படையால் பிடிக்கப்பட்டது.

கப்பலின் கப்டன் உட்படப் பத்துப் பேர் கைது செய்யப்பட்டுச் சென்னைத் துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் தடா சட்டத்தின் கீழ் சிறைவைக்கப்பட்டனர்.

**புலிகளுடன்**

தேவைப்படும்பட்சத்தில் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் நாடுகடத்தும் உடன்படிக்கை செய்துகொள்ளப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

**வீரச்சாவு**

துடன் ஏற்பட்ட கடும் மோதலில் இரு வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்ராதாஅல்துநித்தியாமதி (சட்டநாதபிள்ளை)

கேதீஸ்வரன் -திரியாய் திருக்கோணமலை), வசந்தராஜ் ஆகிய இருவருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**க. பொ. த.**


யிருக்கிறது. கொழும்பு சென்றிருந்த யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பரீட்சை ஆணையாளருடனும், கல்வி அமைச்சு அதிகாரிகளுடனும் இந்த விடயம்தொடர்பாகபேசியுள்ளார்.

பரீட்சை வினாத்தாள்களையும், அனுமதி அட்டைகளையும் எடுத்துவருவதற்காக மீண்டும் யாழ். கல்விப் பணிப்பாளர் கொழும்பு செல்ல இருக்கிறார். மிகவிரைவில் பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியிடப்பட இருக்கிறது. (க)

**போட்டிப்**

டுக்கப்படுவர். வடக்கு-கிழக்கு மற்றும், ஊவா ஆகிய மாகாணங்களிலேயே கணித விஞ்ஞான பயிலுனர் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் அதிகளவு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# 1ஆம்வருட நினைவஞ்சலி



லெப். கபில்
(வீரபாண்டியன்)

(ராஜரத்தினம்
ராஜபாண்டியன்)

வீரச்சாவு :
28 - 02 - 91

புயலுக்குப் புறங்காட்டா
புறப்பட்ட பாண்டியா
புகழேணிக் கொம்பரின்
உச்சத்தில் நின்றாய்
வயலோர வரம்புகளில் - சிறு
புல் கூட
உன் புகழைப் பாடும்
வீர மலர் நீ

கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு.

-குடும்பத்தினர்

(சி/3975)

# தமிழீழ காவல் துறை

## பதவி வெற்றிடங்கள்

01. அ) உப பரிசோதகர் (SUB -INSPECTORS)

தகைமைகள்:- க.பொ.த(சா/த) 6பாடங்களில் சித்தி. 5 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த. (உ/த)

உயரம் :- 5' 6''

வயது :- 18 — 25 வரை

ஆ) காவலர் (பொலிஸ்) பதவி

தகைமை :- க.பொ.த(சா/த) ஆகக்குறைந்தது 8-ம் வகுப்பு.

உயரம் :- 5' 6''

வயது :- 18 — 25 வரை

02. அ) சிறைக்காவல் மேற்பார்வையாளர்கள்
உப பரிசோதகர் தரம்

தகைமை :- க. பொ. த (சா/த) 6 பாடங்களில் சித்தி. 5 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

உயரம் :- 5' 6''

வயது :- 18 — 25

ஆ) சிறைக்காவலர்

தகைமை :- 8-ம் வகுப்பு சித்தி.

உயரம் :- 5' 6''

வயது :- 18 — 25

3. தையல்காரர்

சீருடை தைக்கக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மேற்கூறிய பதவிகளுக்கு ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 1992-03-02 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல் துறையின் செயலகத்திற்கு சமுகம் தரவும்.

பொறுப்பாளர்
தமிழீழ காவல் துறை.

(சி/3973)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.